



# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

**1879 -1916** ரீ–பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் – 6. இதழ் – 2. மார்ச்–ஏப்ரல் 2020

**R5160**

## God's Rainbow Covenant

## தேவனுடைய வானவில் உடன்படிக்கை

*ஆதியாகமம் 8:1–9*

*"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்;"*

*ஆதியாகமம் 9:13*

சமீபத்தில் பாபிலோனில் அகழ்வாராய்ச்சி மூலம் எடுக்கப்பட்ட களிமண் பலகை நோவா காலத்திய ஜலப்பிரளயத்தைப் பற்றிய மிகவும் பழங்கால பதிவு என்று சொல்லப்படுவது நமக்கு ஒரு பெரிய விமர்சனமாக இருக்கிறது. இந்த பலகைகள் நோவாவையும் ஒரு படகையும் குறித்து வரிவடிவம் (Outline) மூலமாக காண்பிக்கிறது. ஜலப்பிரளயத்தைப் பற்றி விளக்கும் சில வார்த்தைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஆதியாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஒன்றிற்கு இதுவே மிகவும் மேலான பதிவு என்று ஏற்றுக் கொள்ளும்படி நாம் கேட்டுக் கொள்ளப்படுகிறோம். இதைப்பற்றிய ஒரு பாடப்பகுதியை நாம் பார்க்க போகிறோம். நாம் திகைக்க வைக்கப்படுகிறோம்! நமது காலத்தைப் பற்றி விவாதிக்கிற வேத வாக்கிய தீர்க்கதரிசனத்தை நாம் நினைவுக்குக் கொண்டு வருகிறோம். "அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்து போகும்." (ஏசாயா 29:14)

இந்த மனிதர்களின் படிப்பினால் பெற்ற நற்பெயரே இவர்களை பரிகாசத்திலிருந்து காப்பாற்றுகிறது. அவர்களது சரியான கருத்துக்களையும் நிச்சயமாக நாம் ஒத்துக் கொள்ளுகிறோம். ஒவ்வொருவருக்கும் சொந்த கருத்து இருக்கும். அல்லது காரியங்களை நடப்பிக்க சொந்த முறை இருக்கும். நம்மைப் பொருத்தவரை, பிரளயம் ஆரம்பித்த குறிப்பிட்ட காலம், மழை பெய்த நாட்கள், தண்ணீர் பெருகுதல், மழை நிற்குதல், வெள்ளம் வடிதல், படிப்படியாக தரை காய்ந்து தாவர வகைகள் வெளிவந்த காலம் அனைத்தும் ஆதியாகமத்தின் அறிக்கைப்படி மிகவும் நியாயமானதாக இருக்கிறது. இப்படியாக ஜலப்பிரளயத்தைப் பற்றிய ஆதியாகமத்தின் பதிவு நம்பத்தகுந்ததாக முத்திரையிடப்பட்டிருக்கிறது. இது பாபிலோனின் ஒழுங்கற்ற பதிவைக் காட்டிலும் நூறுமடங்கு நம்பத்தகுந்தது! ஆதியாகம பதிவில் தெய்வீக ஞானம் வழிகாட்டியிருக்கிறது. மற்றவைகளில் அல்ல என்பது நமக்கு ரூபகாரமாக காணப்படுகிறது.

உலகத்தை மேற்கொண்ட ஜலப்பிரளயத்தின் உற்பத்தி ஸ்தானத்தை அறியாதிருந்த நோவாவும் அவனது குடும்பத்தாரும் இன்னொரு ஜலப்பிரளயம் வரும் என்று நினைத்து அச்சப்பட்டிருக்கலாம். தேவன் மிகவும் சரியானபடி அவர்களது கவனத்தை வானவில்லின் பக்கம் ஈர்த்து இனி உலகமானது ஜலத்தினால் அழிக்கப்படாது என்று உறுதியளித்தார். இதன் தத்துவத்தை நாம் இப்பொழுது பார்க்கிறோம். ஆனால் நோவாவும் அவனது குடும்பத்தாரும் அதன் தத்துவத்தை அறிந்துணராமலேயே, அந்த காரியத்தை நம்பினார்கள். பூமியின் கடைசி "வளையம்" கீழே வந்த பிறகு இன்னொரு ஜலப்பிரளயம் வர முடியாது. ஏனெனில் உடைந்து வருவதற்கு தண்ணீர் மண்டலம் வான மண்டலத்திற்கு மேலே எதுவும் இல்லை. ஜலப்பிரளயத்திற்கு பிறகு தேவையான ஈரப்பசையை வான மண்டலத்திலுள்ள மேகங்கள் மூலம் நாம் பெறுகிறோம். காற்று மண்டலத்திற்கு மேலே ஒரு மகா உறையைப் போல எதுவும் இல்லை.

இப்பொழுது நாம் நோவா வானவில்லை பார்த்தே இராத காரணத்தை நாம் இங்கே காண்கிறோம். ஏனெனில் ஜலப்பிரளயத்திற்கு முன்னர் சூரியன் தண்ணீர் மண்டலத்தின் மூலமாக பிரகாசித்து அதன் கதிர்கள் நேரடியாக படாததால் அங்கே வானவில் தோன்றுவதற்கு சாத்தியமில்லை. ஆனால் தண்ணீர் மண்டலம் உடைந்ததிலிருந்து, சூரியனின் கதிர்கள் நேரடியாகபடுவதால் இப்பொழுது இயற்கையாகவே வானவில் தெரிகிறது. தேவன் அறிவித்ததுபோல வானவில் இருக்கும்வரை ஜலப்பிரளயம் வரவே இயலாது. அவைகளின் மகா தத்துவத்தை காண்போமானால் தேவனுடைய வார்த்தைகளும் வழிகளும் நியாயமில்லாதிருக்காது. மாறாக, எந்த அளவுக்கு தெய்வீக முறைகளையும் செயல்பாடுகளையும் புரிந்து கொள்ளுகிறோமோ அந்த அளவிற்கு அவைகளின் ஞானத்தை நாம் பாராட்டுகிறோம்.

### பாபேல் கோபுரம்

தலைமுறைகளுக்கு பிறகு, நோவாவின் குடும்பம் பலுகிபெருகினபோது, தேவனுக்கும் மனிதனுக்குமிடையேயான வானவில்லின் உடன்படிக்கை – இன்னொரு ஜலப்பிரளயம் வராது என்கிற உத்தரவாதம்– மறக்கப்பட்டது. அந்த காலத்து உலக ஞானிகள், வேறொரு ஜலப்பிரளயம் வந்தால் தப்பித்துக் கொள்ளத்தக்கதாக ஒரு பெரிய கோபுரத்தை முட்டாள்தனமாக கட்ட ஆரம்பித்தார்கள். ஏனெனில் அவர்கள் தேவனுடைய செய்தியை புறக்கணித்து அவரது வாக்குத்தத்தத்தை அலட்சியம் செய்தார்கள். அவர்களது முட்டாள்தனத்தை அவர்களே வெளிப்படுத்தட்டும் என்றும் அவர்களது உழைப்பும் நெற்றி வேர்வையும்

பிரயோஜனமற்றது என்பதை நிரூபிக்கட்டும் என்றும் தேவன் விட்டுவிட்டார்.

முடிவில் அவர்களது மகா கடுமையான வேலை ஓரளவிற்கு வருத்தத்தை ஏற்படுத்தியது. இதன்மூலம் ஓரளவுக்கு விலையேற பெற்ற பாடத்தை கற்றுக் கொண்டார்கள். கர்த்தர் அவர்களது மொழியை தாறுமாறாக்கி ஒருவொருக்கொருவர் பேசுவதை புரிந்து கொள்ளாமலும், ஒத்துழைக்க முடியாமலும் இருக்கும்படி செய்தார். மொழியிலும், ஆர்வத்திலும் வேறுபடுத்தப்பட்டு அவர்கள் பிரிந்தார்கள். அவர்களது ஆர்வம் பலவாறாகி படிப்படியாக, பழக்க வழக்கங்களும், தோலின் நிறமும் காலப்போக்கில் மென்மேலும் வேறுபட்டன. இப்படியாக விநோதமான மனோநிலையும், மொழியும் உடைய பல்வேறு இனத்தவர்கள் உண்டானார்கள்.

இது மனுக்குலத்தின்மேல் உள்ள அக்கரையினாலும் தெய்வீக நோக்கம் மிகவும் சாதகமாக அமையவும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட தேவனுடைய திட்டம் என்று அப்போஸ்தலர் பவுல் நமக்கு கூறுகிறார். அவர் கூறுகிறதாவது: "மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்க தக்கதாக தம்மை தேடும்படிக்கு அப்படிச் செய்தார்." (அப்போஸ்தலர் 17:26,27)

எப்படி தேவனுடைய வசனத்தின் ஒரு பகுதி இன்னொரு பகுதிக்கு வெளிச்சத்தைத் தருகிறது! இப்படியாக தெய்வீக ஞானம் மனுக்குலத்தின் மேல் உள்ள அக்கரையினால் கண்காணிப்பு செய்வதை நாம் பார்க்க முடிகிறது. மனிதன் தன் அறியாமையினால் சாத்தானின் ஊழியனாக ஆவதை தேவன் அனுமதித்தாலும், குறிப்பிட்ட அளவுக்கு அவர் அவனை பாதுகாத்து, அவனது நன்மைக்காக அவனது காரியங்களை ஒழுங்குப்படுத்துகிறார். நாம் பார்த்த பிரகாரம் அந்த நன்மையானது இயேசுவின் இரண்டாம் வருகையிலும் அதன்பிறகு ஸ்தாபிக்கப்படும் அவரது மேசியாவின் ராஜ்யத்திலும் முழுமையாக அடையப் பெறுவார்கள். அந்த ராஜ்யம் சாத்தானை கட்டி, இருள் மற்றும் பாவத்தின் வல்லமையை சிதறடிக்கப்பண்ணும். அது விருப்பமுள்ள கீழ்ப்படிகிற மனுக்குலத்தை, சுகப்படுத்தி ஆசீர்வதித்து உயர்த்த நீதியின் சூரியனாக பிரகாசிக்கும்.

ஆனால் மனித குடும்பங்களை வெவ்வேறு ஜாதியினராக பிரித்தது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னான இருண்ட காலத்திற்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது. ஜாதிகள் ஒருவரையொருவர் கவனித்து பிறரிடமிருந்து தங்களை பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். மொழிப் பிரச்சனையானது நூற்றாண்டு காலமாக நெருங்கி வாழ்கிற ஜனங்களை பிரிக்க பயன்பட்டது. அங்குமிங்கும் செல்வதையும் தடை செய்தது. ஆனால் கடந்த எழுபது ஆண்டு காலமாக (இந்த கட்டுரை 1913ல் எழுதப்பட்டது) நீராவி சக்தி கண்டுபிடிக்கப்பட்டவுடன் போக்குவரத்து நன்றாக முன்னேறி இருக்கிறது.

கடந்த அறுபது ஆண்டுகளில் அனைத்து தேசங்களும் தங்களது தடைகளை ஆச்சரியத்தக்க விதத்தில் உடைத்து வருகிறார்கள். இது "ஜாதிகளை சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன்" (செப்பனியா 3:8) என்ற தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இருக்கிறது. உலகத்தின் மனுக்குலம் மிகவும் நெருக்கமாக வந்து கொண்டு இருக்கிறது; மொழித்தடைகள் எல்லாம் உடைந்துகொண்டிருக்கின்றன; இந்த தடைகள் உடைதல் எல்லாம், மனுக்குலத்தின் நன்மைக்கோ அல்லது தீமைக்கோ அவர்களது ஒத்துழைப்புக்கு பிரயோஜனமாக இருக்கின்றன. மனுக்குலம் முழுவதும் சுபாவத்தில் பாவிகளாயிருப்பதால் அவர்களது ஒத்துழைப்பு எல்லாம் சுயநலத்துடன் இருக்கிறது, ஆகையால் பெரும்பாலும் தீமைக்காகவே இருக்கிறது.

ஆகையால் தங்களது செல்வத்திற்கு எதிராக வரவிருக்கிற எந்த ஒரு பேராபத்திலிருந்தும் பாதுகாக்க ஒரு பலமான ஒத்துழைப்பாகிய ஒரு மகா பெரிய பாபேல் கோபுரத்தை அவர்கள் கட்டுகிறதை நாம் இன்றைய நாளில் காண்கிறோம். உழைக்கும் வகுப்பாரும் இதேபோல் செய்து வருகிறார்கள். இயந்திர வல்லுநர்கள் சங்கம் என்கிற மகா பாபேல் கோபுரத்தை கட்டிவருகிறார்கள். அது தங்களை எல்லா துன்பங்களிலிருந்தும் பாதுகாத்து, அதனிமித்தம் என்றென்றைக்கும் பாதுகாப்பாக இருப்போம் என்று நம்புகிறார்கள். நிறவேற்றுமை, மொழித்தடைகளையும் மீறி முதலாளித்துவ மற்றும் தொழிலாள ஸ்தாபனங்கள் நீண்ட காலத்திற்கு முன்பே தோன்றி அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. வெகுசீக்கிரத்தில் இவைகளுக்கிடையேயான பெரிய போராட்டம் வெடித்து மனுக்குலத்தின் மேல் பயங்கரமான துன்பத்தையும் அழிவையும் ஏற்படுத்தும். இதைத்தான் "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் உண்டாயிராத ஆபத்துக்காலம்" என்று வேதாகமம் கூறுகிறது. (தானியேல் 12:1)

## அடுத்த பேரழிவு அக்கினி

பரிசுத்த பேதுரு மனுக்குலத்தின் சரித்திரத்தை மூன்று யுகங்களாக பிரிக்கிறார். ஆனால் நமது பொது மொழி பெயர்ப்பில் அது "உலகங்கள்" என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் யுகங்கள் என்பது சரியான பதம். பூமியின் முதலாவது யுகம் ஜலப்பிரளயத்தோடு முடிந்தது. அதன்பிறகு தற்கால இரண்டாவது யுகம் ஆரம்பித்தது. பரிசுத்த பவுல் இதை "இந்த பொல்லாத உலகம்" அல்லது யுகம் என்று அழைக்கிறார். ஏனெனில் இந்த யுக காலத்தில் மனிதர் தங்களால் முடிந்ததை செய்தும் தீமையானது மிதமிஞ்சி தலைவிரித்தாடுகிறது.

முதல் யுகம், அல்லது அதன் ஏற்பாடுகள் எல்லாம் வெற்றி கொள்ளப்பட்டு ஜலப்பிரளயத்தினால் முடிவுக்கு வந்தது. மேலும் பரிசுத்த பேதுரு, இப்பொழுது இருக்கிற "உலகம்" அல்லது அதன் ஏற்பாடுகள் "அக்கினி" என்கிற பேரழிவால் முடிவுக்கு வரும் என்று நமக்கு கூறுகிறார். ஆனால் அக்கினியைத் தொடர்ந்து ஒரு புது "உலகம்" அல்லது புது யுகம் அல்லது ஏற்பாடுகள், மனுக்குலம் இதுவரை அனுபவித்ததைக் காட்டிலும் மேன்மையானவைகள் உண்டாகும். "வரப்போகிற உலகம் என்று கூறுகிறோமே" அது நீதியின் யுகமாக இருக்கும். ஏனெனில் அது மேசியாவின் ராஜ்யத்தின் நேரடியான ஆளுகை மற்றும் மேற்பார்வையில் இருக்கும். (2 பேதுரு 3:10–13)

ஆரம்பத்தில் வேதமாணவர்கள் தற்கால காரியங்களை அழித்து புதிய யுகத்தை கொண்டு வருகிறதாக பரிசுத்த பேதுரு கூறுகிற அக்கினியானது சொல்லர்த்தமான அக்கினி என்றும். அது சொல்லர்த்தமான பூமியையும் வானத்தையும் அழிக்கும் என்றும் புரிந்து கொண்டிருந்தார்கள். எனினும் ஆழ்ந்த ஆராய்ச்சி மூலம்

அக்கினி என்பது அடையாளமான வார்த்தை என்பதையும் அது தற்கால அமைப்புகளை தேவனுடைய சித்தத்திற்கு மாறாக இருக்கிற அனைத்தையும் அநீதியான, நீதியில்லாதிருக்கிற ஒவ்வொன்றையும் அழிக்கும் என்பதையும் புரிந்து கொள்கிறார்கள்.

"பூதங்கள் வெந்து உருகிப்போம்" என்பதில் பூதங்கள் என்பது முதலாளித்துவம் மற்றும் தொழிலாளர்கள் அவர்களுக்கிடையேயான சச்சரவு ஆகும். இது முன்னரே அதிகமாக இருக்கிறது. பரிசுத்த பவுல் தீர்க்கதரிசனமாக உரைத்ததுபோல் அது ஜ்வாலையாக வெடிக்கும். "வானங்கள்" என்பது தேவனுடைய வாசஸ்தலத்தைக் குறிக்கிறது. அது சபை ஸ்தாபனங்களை, மதங்களாகிய வானங்களைக் குறிக்கிறது. இவைகள் முதலாளித்துவம் மற்றும் தொழிலாளர் போராட்டத்தில் ஈடுபட்டு அந்த ஆபத்தின் நாட்களில் அழிந்து போவார்கள். தேவனுக்கு ஸ்தோத்திரம்! புது யுகமானது அந்த ஆபத்தில் குறுக்கிட்டு தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டதை நிரூபிக்கும். "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டது." (ஆகாய் 2:7)

ஜலப்பிரளயத்திற்கு முன்பு இருந்த பழைய ஒழுங்குகள் அனைத்தும், நோவா மற்றும் அவனது குடும்பத்தைத் தவிர, அழிக்கப்பட்டது. அதே போல இயேசு கிறிஸ்து என்னும் பாதுகாப்பான பேழையில் இருப்பவர்கள் மட்டுமே தற்கால அழிவிலிருந்து காக்கப்படுவார்கள் என்று பரிசுத்த பேதுரு அறிவிக்கிறார். அனைத்து சபை பிரிவுகளிலும் ஜாதிகளிலும் இருக்கிற கிறிஸ்துவின் உண்மையுள்ள சீஷர்கள், அவருடன், புதிய யுகத்தின் அல்லது மேசியாவின் ராஜ்யத்தின் எதிர்கால ராஜரீக ஆசாரியர்களாக, "புதிய வானங்களாக" ஆவிக்குரிய ஆட்சியாளர்களாக இருப்பார்கள். அவர்களது மேற்பார்வையில் "ஒரு புதிய பூமி" புதிய சமூக அமைப்பு ஆரம்பிக்கப்படும். அதில் நீதி பரவியிருக்கும். இந்த புதிய ஒழுங்கைப்பற்றி நாம் வாசிக்கிறதாவது: "நீதி வாசமாயிருக்கும் புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்." (2 பேதுரு 3:13)

சந்தேகத்திற்கிடமில்லாமல், உலகம் அறிந்திராத இந்த ஆபத்தில் அநேக மனித உயிர்கள் அழியும். அத்துடன் இந்த யுகம் முடிவடையும். எனினும் மனுக்குலத்தில் திரளானவர்கள் உயிருடன் இருப்பார்கள். ஆனால் அவர்களது தற்கால சமூக, பொருளாதார மற்றும் மத சம்பந்தமான நுட்பமான அனைத்து ஏற்பாடுகளும் அழிந்து போகும். எல்லாம் மகா மேசியாவினால் புதிய அடிப்படையில் வைக்கப்படும்.

கர்த்தர், செப்பனியாவின் தீர்க்கதரிசனத்தில் வருகிற ஆபத்தின் நாட்களை பட்சிக்கிற அக்கினி என்று விளக்குகிறார். அக்கினி ஞானஸ்நானமாகிய ஆபத்திற்கு பிறகு, "ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படி ஒரு சுத்தமான செய்தியை அவர் மனுக்குலத்திற்கு அனுப்புவார்." (செப்பனியா 3:9) இது நமக்கு, அந்த நாளின் பயங்கரமான துன்பத்தில் மனுக்குலம் முழுவதும் அழிக்கப்படாது என்று போதிக்கிறது. மேலும் கர்த்தருடைய நாமத்தின் பேரில் கொடுக்கப்பட்ட குழப்பமான போதனைகள் அனைத்தும் இந்த யுகத்துடன் அழிந்து போகும் என்று அது போதிக்கிறது. எதிர்காலத்தில் பிரகடனப்படும் தெய்வீக கிருபை மற்றும் சத்தியத்தின் செய்தி சுத்தமானதாகவும் அதைப் பெறுகிற அனைவருக்கும் அது ஆசீர்வாதமானதாகவும் இருக்கும்.

## R5162 Covenant Relationship with God Essential to Life Everlasting

# நித்திய ஜீவனுக்கு தேவனுடனான உடன்படிக்கையின் உறவு அத்தியாவசியம்

தேவன் மிருக ஜீவராசிகளிடம் எந்தவித உடன்படிக்கையின் உறவுக்குள் இல்லை. அவைகளுக்கு பொதுவான தேவைகளை தேவன் அளிந்திருந்தாலும், அவைகளுக்கு எந்தவித வாக்குத்தத்தங்களையும் பண்ணவில்லை. ஆனால் அவருடைய அறிவுள்ள சிருஷ்டிகளிடம் ஒரு உடன்படிக்கையோ அல்லது ஒப்பந்தத்தையோ செய்திருக்கிறார் என்று நாம் புரிந்து கொள்ளலாம். அவரது சித்தத்தை அவர்கள் செய்யும்வரை அவர்கள் ஜீவனை பெற்றிருப்பார்கள் என்பதே அதன் நிபந்தனை. இந்த ஏற்பாடுகளை மீறினதால் விழுந்து போன தூதர்கள் தள்ளிப்போடப்பட்டு, "மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலியினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்." (யூதா 6) ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படியாதிருந்து இந்த உடன்படிக்கையை மீறினதால் மரணதண்டனைக்கு கீழாக வந்தார்கள். "அவர்களோ ஆதாமைப்போல் மீறி, அங்கே எனக்கு விரோதமாக துரோகம் பண்ணினார்கள்." (ஓசியா 6:7)

ஆதாமின் மீறுதலினால் உலகமானது எந்த விதத்திலும் தேவனோடு உடன்படிக்கையின் உறவுக்குள் இல்லை. மாறாக அவர்கள் புறம்பானவர்களும் அந்நியரும் பரதேசிகளுமாய் இருக்கிறார்கள். (எபேசியர் 2:11–13) தேவன் ஆபிரகாமை ஓரளவுக்கு மறுபடியுமாக உடன்படிக்கையின் உறவுக்குள் கொண்டு வந்தார், ஆனால் முழுமையாக அல்ல. அவர் இஸ்ரயேல் தேசத்துக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மூலம் குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களை கொடுத்தார். இந்த உடன்படிக்கையை கைக்கொள்ளுபவர்கள் ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களை பெற்றுக் கொள்ள தகுதியுள்ளவர்கள் ஆவார்கள் என்பதே அதன் நிபந்தனை. அதாவது அவர்கள் மூலமாக உலகத்திலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும். (ஆதியாகமம் 12:3) நியாயப்பிரமாண உடன்படிக்கை யூத தேசத்துக்கு கொடுக்கப்பட்டது. மோசே அவர்களது மத்தியஸ்தர். ஏனெனில் இஸ்ரயேல் தேசத்தோடு நேரடியாக உடன்படிக்கை செய்வது இயலாத காரியம். அவர்கள் பெற்றிருந்த மாம்சீக பலவீனத்தினால் அவர்களால் அந்த உடன்படிக்கையை கைக் கொள்ள முடியாமல் போனாலும், பரிசுத்த பவுல் குறிப்பிடுவது போல ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அது அவர்களுக்கு ஆசீர்வாதத்தை கொண்டு வந்தது. (ரோமர் 7:7) புறஜாதியார் விழுந்துபோயிருந்த நிலைமையிலிருந்து இஸ்ரயேல் உயர்த்தப்பட்டாலும் அவர்கள் எதிர்பார்த்திருந்த ஆசீர்வாதத்தை கொண்டு வரவில்லை. அது மரண தண்டனையை அவர்களிடமிருந்து நீக்கவில்லை, அவர்களுக்கு ஜீவனை கொடுக்கவில்லை.

தேவனுடைய பிள்ளைகளுக்கு தற்போது பிரகாசிக்கிற தெளிவான வெளிச்சத்தில், நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, கிறிஸ்துவின் சபையானது மகிமையடைந்த பிறகு தேவன் இஸ்ரயேலரோடு செய்யப் போகிற உடன்படிக்கைக்கு முன்னடையாளமானது என்பதை நாம் காண்கிறோம். மேலும் மோசே, ஒரு மேலான மத்தியஸ்தருக்கு முன்னடையாளமாக இருந்தார் என்பதையும், நியாயப்பிரமாண பலிகளெல்லாம் எபிரேயர் 9:23இல் குறிப்பிட்டுள்ளபடி "மேலான பலிகளுக்கு" முன்னடையாளமானது என்பதையும், அவர்களது ஆசாரியத்துவம் சுவிசேஷ யுகத்தின் ராஜரீக ஆசாரியத்துவத்துக்கு முன்னடையாளம் என்பதையும் நாம் காண்கிறோம். (எபிரேயர்; 7:27)

வேதாகமத்தில் உடன்படிக்கை மற்றும் வாக்குத்தத்தம் என்ற வார்த்தைகள் பல பொருளுடையவைகளாக பயன்படுத்தப்படுகின்றன இஸ்ரயேலின் பிள்ளைகள் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு உள்ளாக செல்வதற்கு வெகு காலத்திற்கு முன்னரே அவர்களது ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு கீழாக இருந்தார்கள். இன்னும் அவர்கள் அந்த உடன்படிக்கைக்கு கீழாக இருக்கிறார்கள். பரிசுத்த பவுல் சொல்கிறதாவது: "தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை." (ரோமர் 11:2) மேலும் அவர், புறஜாதியாரிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட சபை கூட்டிச் சேர்க்கப்பட்ட பிறகு இஸ்ரயேலுக்கு தேவனுடைய கிருபை திரும்ப கிடைக்கும் என்று கூறுகிறார். ஏனெனில் அவர்கள் பிதாக்களினிமித்தம் இன்னும் அன்புகூரப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இஸ்ரயேலின் பிதாக்கள், முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு என்பவர்களே. ஆகையால் யூதர்கள் ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு கீழாக இருக்கிறார்கள். (ரோமர் 11:25-28)

## இஸ்ரயேலுடன் செய்த உடன்படிக்கையின் உறவு உண்மையானது

ஒரு உண்மையான உடன்படிக்கையின் உறவு என்பது முழுவதுமாக நிர்மாணிக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. சும்மா எண்ணப்பட்டதோ, உத்தேசிக்கப்பட்டதோ என்று இல்லாமல் நிறைவேற்றப்படுவது. இஸ்ரயேல் மக்கள் சீனாய் மலைக்கு வரும்போது அவர்களுடன் உடன்படிக்கை செய்ய தேவன் தீர்மானித்திருந்தார். எல்லாம் தயாரானபோது, மோசேயை மத்தியஸ்தராகக் கொண்டு உடன்படிக்கை பண்ணப்பட்டது. மத்தியஸ்த வேலையானது இரண்டு விதமானது. முதல் பகுதி நீதியை திருப்திபடுத்துதலை குறிக்கும்படியாக நியாயப்பிரமாணத்தின் மேல் தெளித்தல்; இரண்டாவது பகுதி ஜனங்களை தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் கொண்டு வருவதை குறிக்கும்படியாக ஜனங்களின்மேல் தெளித்தல் ஆகும். அந்த உடன்படிக்கையானது முழுவதுமாக பண்ணப்பட்டது. அதிலிருந்து இன்னும் அது செயல்பாட்டில் இருக்கிறது. (யாத்திராகமம் 24:3-8)

இஸ்ரயேலர்களுடன் தேவன் நூற்றுக்கணக்கான வருடங்கள் இருக்கக்கூடிய ஒரு உடன்படிக்கையை செய்தார். எனினும் அது ஒரு வருடம் மட்டுமே நன்றாக இருந்தது. ஏனெனில் முதல் வருடம் ஜனங்கள் தேவனுக்கு இசைவாக இருந்தார்கள். அந்த காலம் முடிவடைந்த போது பாவத்தை போக்குதலும் நிறுத்தப்பட்டது. ஏனெனில் காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே. முழு ஏற்பாடும் ஒரு நிழலாக மாத்திரமே இருந்தது. முதலாம் வருடம் முடிவடைந்த போது, பாவ நிவாரண நாள் சம்பிரதாயத்தின்படி ஆரம்பிக்கப்பட்டு, அடுத்த வருடத்திற்கான பலிகள் செலுத்தப்பட்டன. பாவ நிவாரண நாளின் பலிகள் ஒவ்வொரு வருடமும் செய்யப்பட்டதின் உண்மையானது, அவைகள் ஒரு வருடத்திற்கு மட்டுமே பயனுள்ளதாக இருந்தன. மேலும் அவைகளால் பாவத்தை போக்க இயலவில்லை. (எபிரேயர் 10:1-4)

பாவ நிவாரண நாளுக்குப் பிறகு, ஜனங்கள் பல்வேறு வகையான பலிகளை செலுத்தினர். இவைகளில் சில தேவனை ஆராதனை செய்கிறவரையே அளிப்பதை அடையாளப்படுத்துவதைப் போல காணப்படுகிறது. அது யேகோவாவின் சித்தத்தை செய்ய தாம் விரும்பியதை காட்டுவதைப்போல இருந்தது. மற்றவைகள் எல்லாம் பாவத்திற்கான பலிகள். அது ஆராதனை செய்பவர் தனது நடத்தையில் தெரிந்து செய்ததை உணர்ந்ததை குறிக்கிறது. ஒரே ஒரு யூதன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மாத்திரமே கடைபிடிக்கிற அளவிக்கு நியாயப்பிரமாண தேவைகள், அவ்வளவு கடினமானதாக இருந்தன. அவர் பரிபூரணராக இருந்ததினால் மட்டுமே அவரால் செய்ய முடிந்தது. நியாயப்பிரமாணமும் ஒரு பூரண மனிதனுடைய திறமையை அளவிடக்கூடியதாக இருக்கிறது.

உடன்படிக்கையின் மத்தியஸ்தர் மோசே மூலமாக இஸ்ரயேலர்கள் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள்ளாக இருந்தார்கள் என்பதை "நீங்கள் கைக்கொள்ள வேண்டும் என்று அவர் உங்களுக்கு கட்டளையிட்ட பத்துக்கற்பனைகளாகிய தம்முடைய உடன்படிக்கையை அவர் உங்களுக்கு அறிவித்தார்" என்று கூறி விளங்கப்பண்ணினார். (உபாகமம் 4:13) ஆகையால் யூதனானவன் தனது வாழ்நாள் முழுவதும் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கிறான். (ரோமர் 7:1) நியாயப்பிரமாண உடன்படிக்கை யூதர்களுடனான நித்தியமான கட்டளையாக கொடுக்கப்படாதிருந்தாலும், கிறிஸ்துவுக்குள்ளாக வந்தவர்கள் மட்டுமே அதிலிருந்து விடுபடமுடியும். மீதமுள்ள யூதர்கள் அதிலிருந்து விடுபட முடியாது. ஆனால் ஒரு புது மத்தியஸ்தராகிய கிறிஸ்து மூலம் ஒரு புது உடன்படிக்கையை கர்த்தராகிய தேவன் யூதர்களுடன் ஏற்படுத்த நாட்கள் மிகவும் சமீபமாயிருக்கிறது. அந்த மத்தியஸ்தர் அவர்களது உடன்படிக்கையின் கெட்ட அம்சங்களிலிருந்து விடுதலையடைவதற்கு அதை சரியானபடி கடைபிடிக்க அவர்களுக்கு உதவுவார்.

பாபிலோனிய சிறையிருப்பு முடிவடைந்த போது, தானியேல் தீர்க்கதரிசி அவரது ஜனங்களைப் பற்றிய தீர்க்கதரிசனத்துக்கான விளக்கத்தை கர்த்தரிடம் கேட்டார். அவரது ஜெபத்திற்கான பதில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது. "மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களை தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவர்த்தி பண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்தரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின் மேலும் உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது." (தானியேல் 9:24-27)

இந்த தீர்க்கதரிசனத்தின் விளக்கத்திற்கு வாசகரை தொகுதி 2, பாடம் 3ஐ பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இவைகள் எல்லாம் அந்த எழுபது வாரத்திற்குள்ளாக செய்யப்பட வேண்டியிருந்தது. இந்த காலப்பகுதியில் எழுபதாவது வாரம் தான் மிக முக்கியமானதாக இருந்தது. ஏனெனில் அந்த வாரத்தில்தான் மேசியா உடன்படிக்கையை உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. இந்த வாரம் கி.பி. 29 அக்டோபரில் ஆரம்பித்து கி.பி. 36 அக்டோபரில் முடிவடைந்தது என்று பாடம் 3இல் காண்பித்திருக்கிறோம். இது நமது ஆண்டவரின் ஊழிய கால ஆரம்பத்திலிருந்து புறஜாதியானாகிய கொர்நேலியு முதன் முதலில் மனந்திரும்பி பரிசுத்த ஆவியை பெற்றதுவரை என்று காண்பித்திருக்கிறோம்.

## ஒரு வாரமளவும் உடன்படிக்கை உறுதிபண்ணப்பட்டது

இந்த ஏழு வருட காலத்தில் தேவன் யூதர்களுக்கு விசேஷித்த கிருபையை அளித்தார். அந்த வருடங்களின் வாரத்தின் ஆரம்பத்தில், அப்பொழுது முப்பது வயதை அடைந்த நமது கர்த்தர் தம்மை ஒரு பலியாக தேவனிடத்தில் ஒப்புக் கொடுத்தார். இந்த அர்ப்பணிப்பு உண்மையான பாவ நிவாரண நாளின் முதல் அம்சமாக இருந்தது. நிழலில் காளையின் பலிக்கு ஒத்திருந்தது. நமது கர்த்தர் உண்மையான பலிகளை ஆரம்பித்தார். பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார்." (எபிரேயர் 10:9) நமது கர்த்தர் அங்கே உண்மையானதை நிலைநிறுத்த நிழலை நீக்கிப்போட ஆரம்பித்தார். சொல்லப்போனால் உண்மையான காளையின் வேலையை ஆரம்பிப்பதற்காக மட்டுமல்ல, அதை முடிக்கவும், உண்மையான மோசேயாக அவரது இடத்தை எடுத்துக் கொள்ளுவதற்குமேயாகும். சிலுவையில் அவரது மரணம் வரை அவர் இதை நிறைவேற்றவில்லை.

உண்மையான பாவ நிவாரண நாளின் வேலையின் மற்ற பல அம்சங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பிரதான ஆசாரியன் கர்த்தரின் வெள்ளாட்டுக்கடாவை பலி கொடுத்து அதன் இரத்தத்தை மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு எடுத்துச் சென்று அங்கே தெளிப்பது பாவநிவாரண நாளின் வேலையின் ஒரு பகுதியாக இருந்தது. வெளியே வந்து, போக்காடான ஜனங்களின் பாவத்தை மன்னித்து, இன்னும் ஜனங்களை ஆசீர்வதிப்பதும் அவரது பாவநிவாராண நாளின் வேலையின் ஒரு பகுதியாக இருக்கிறது. நமது கர்த்தரின் ஊழிய காலத்தின் போது அவர் நிழலின் அநேக அம்சங்களை நிறைவேற்றினார். கல்வாரியில் தாமே பலியாகும் அவரது வேலை நிறைவேற்றப்பட்டது. அந்த பலியின் தெய்வீக ஒப்புதல் வெளிப்படுத்தப்பட்டது.

அந்த வாரம் பாதி சென்ற போது மேசியா பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார் என்ற தீர்க்கதரிசியின் கூற்று, நிழலான வேலைகளின் பலன்களிலிருந்து நமது ஆண்டவர் ஒரு ஜனமாக இஸ்ரயேலை முடிவுக்கு கொண்டு வந்தார் என்பதையும், அவர்கள் அவரை சிலுவையில் அறைந்தபொழுது, தெய்வீக கிருபைகளிலிருந்து அவர்கள் தள்ளப்பட்டார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. நமது கர்த்தர் தமது மரணத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் கூறியிருந்ததாவது: "இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்." (மத்தேயு 23:38) இந்த தள்ளப்படுதல் தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழ்வரைக்கும் கிழிந்ததின் மூலமாக காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஒரு திறக்கப்படுதலைக்காட்டிலும் ஒரு முறிவை அடையாளப்படுத்தியது.

யூத தேசம் தள்ளப்படுதல் அவர்களது நியாயப் பிரமாண உடன்படிக்கையின் முடிவை குறிக்கவில்லை. தேவனுடைய ஆவியின் ஆழ்ந்த காரியங்களை புரிந்து கொள்ளக்கூடிய சலுகை கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் சபைக்கு, வருடா வருடம் தொடர்ந்து செலுத்தப்பட்டு வந்த நிழலான பலிகளின் பலன்கள், நமது கர்த்தரின் மரணத்துடன் முடிவுக்கு வந்ததாக காணப்படுகிறது. அந்த நேரத்திலிருந்து அவர்கள் ஒரு தேசமாக தெய்வீக கிருபையை இழந்திருக்கிறார்கள். ஆனால் மோசேயைவிட்டு கிறிஸ்துவிடம் வந்தவர்கள் மட்டுமே அதிலிருந்து கிருபையை பெற்றவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் மரணபரியந்தம் நிழலான பலிகள் தொடர்ந்தன. ஏனெனில் இயேசுவே நியாயப்பிரமணத்திற்கு கீழாக இருந்தார். அதன் ஒரு பகுதியை அவர் நிறைவேற்றினார். அதிலுள்ளதெல்லாம் நிறைவேறும் வரைக்கும் அதன் எந்த அம்சமும் ஒழிந்து போகாது. (மத்தேயு 5:17,18)

நமது கர்த்தரின் பரமேறுதலுக்குப் பின், முந்தைய காலத்தைக் காட்டிலும் பெரிய காரியங்களை செய்ய சாத்தியமாயிற்று. சில நாட்களுக்குள்ளாகவே கர்த்தரின் ஆசீர்வாதத்தின் கீழ் ஆயிரக்கணக்கான யூதர்கள் சுவிசேஷ களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டார்கள். நமது கர்த்தருடைய வேலை ஒரு தேசமாகக் குறைக்கப்பட்டிருந்தாலும், தனிப்பட்ட யூதர்களுக்கு சந்தர்ப்பம் பெருகியது. இயேசுவின் மரணம் வரை ஐந்நூறு யூதர்கள் மட்டுமே அவரை விசுவாசித்தார்கள், அதன் பிறகு ஆயிரக் கணக்கானோர் சேர்க்கப்பட்டனர். (1 கொரிந்தியர் 15:6 ; அப்போஸ்தலர் 2:41) நமது கர்த்தரின் மரணத்திற்கு பிறகு மூன்றரை வருடகாலம் தேவன் புறஜாதிகளை அங்கீகரிக்கவில்லை. ஏனெனில் யூதர்களுக்கு எழுபது வாரம் கிருபை அளிப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். ஆகையால் அந்தக் காலம் முடியும்வரை புறஜாதிகளுக்கு கிருபை அளிக்கவில்லை.

இஸ்ரயேலர்களுக்காக ஒதுக்கப்பட்ட எழுபது வார கால வருடங்கள் முடிவடைந்த பிறகு, "தமது நாமத்திற்கென்று ஒரு ஜனத்தை" தெரிந்துகொள்ளும்படி புறஜாதிகளிடம் சுவிசேஷம் போக ஆரம்பித்தது. (அப்போஸ்தலர் 15:13-18) இந்த சுவிசேஷ யுக காலத்தில் உண்மையான ஒப்புரவாகுதலின் வேலை அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கிறது. நமது கர்த்தர் தமது பலியில் உண்மையான காளையின் பலியை முன்னரே கொடுத்திருக்கிறார்; பெந்தெகொஸ்தே நாளிலிருந்து உண்மையான வெள்ளாட்டுக்கடாவாகிய சபை வகுப்பாரை சமர்ப்பித்துக் கொண்டு வருகிறார். இந்த வேலை பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டுவருகிறது. இது முடிவடைந்த பிறகு, நிழலில் காண்பிக்கப்பட்டதுபோல, இரத்தமானது கிருபாசனத்தில் தெளிக்கப்படுவதற்கும், "சகல ஜனங்களுக்கும் பாவ நிவர்த்தி செய்யவும்" மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் எடுத்துச் செல்லப்படும்.

## பலியின் உடன்படிக்கை

ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட ஆபிரகாமின் உடன்படிக்கை. ஒரு முழுமையான உடன்படிக்கை. அது அனைத்து மனுக்குலத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. அந்த உடன்படிக்கையாவது: ''உனக்குள்ளும் உனது சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.'' (ஆதியாகமம் 12:3;28:14) அதன் வாக்குத்தத்தம் வித்துக்குரியது: (1) இயேசு (2) தலையாகிய கிறிஸ்துவும் சரீரமும் (3) அவர்கள் மூலம் உலக வித்து. அதன் பலாபலன் ஆபிரகாமின் விசுவாசத்தை உடைய அனைவருக்கும் நீட்டிக்கப்படுகிறது. பூமியிலுள்ள சகல வம்சங்களுக்கும் ஒரு ஆசீர்வாதம் வரும் என்பதே தேவனுடைய வாக்குத்தத்தம். இந்த உடன்படிக்கையானது தேவனுடைய பக்கம் ஒரு ஆணையினால் உறுதிபண்ணப்பட்டது– தேவனுடைய ஆணை மற்றும் வாக்குத்தத்தம் என்கிற இரண்டு காரியங்களினால் உறுதி பண்ணப்பட்டது. வாக்குத்தத்தத்தின் சுதந்தரர்கள் அதன் நிறைவேறுதலை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். (எபிரேயர் 6:13–18)

பூமியிலுள்ள சகல வம்சங்களையும் ஆசீர்வதிக்க வேண்டிய ஆபிரகாமின் வித்து ஒரு ஆவிக்குரிய வித்தாக இருக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. ஆபிரகாமும் அவரது சந்ததியினரும் சுபாவ மனிதர்களாக இருந்ததால், அவர்கள் ஆவிக்குரிய வித்தாக ஆக ஒரே வழி, பூமிக்குரிய சுபாவத்தை பலியிட்டு, ஆவிக்குரிய சுபாவத்தை அடைவதுதான். இந்த பலியை நடப்பிக்க முதன் முதலில் நமது கர்த்தராகிய இயேசுவுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. இந்த பலியின் உடன்படிக்கையை நிறைவேற்றினதின் மூலமே, ஆசீர்வாதத்தை கொண்டுவரவேண்டிய வித்தின் தலையாக அவர் ஆக முடிந்தது. (சங்கீதம் 50:5; 40:7–10)

சுவிசேஷ யுகத்தில் யேகோவா, ஆவிக்குரிய சுபாவத்தை அடைவதற்காக, தங்களது மானிட ஜீவியத்தையும் பூமிக்குரிய நன்மைகளையும், கொடுக்கிற இந்த ஆவிக்குரிய வித்தின் அங்கங்களை தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார். இந்த வித்தை தெரிந்தெடுப்பதுதான் சுவிசேஷ யுகத்தின் வேலையாக இருந்து வருகிறது. சீக்கிரத்தில் வித்துக்கள் அனைத்தும் கூட்டிக் சேர்க்கப்படும்; அதன்பிறகு சுபாவ வித்தை ஆசீர்வதிக்கும் வேலை ஆரம்பமாகும். இவர்கள் தெய்வீக கிருபையை ஏற்றுக் கொள்வதினால், அவர்கள் மூலம் ஆசீர்வாதம் சகல ஜாதிகளுக்கும் விரிவுபடுத்துப்படும்.

சபையானது எப்பொழுதும் பிதாவானவருடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்கும். அவர் அவர்களை பிள்ளைகள் என்று அழைப்பது அவர்கள் அவருடன் இணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை குறிப்பாக உணர்த்துகிறது. (யோவான் 1:12) ஒவ்வொரு தகப்பனாரும் தன் பிள்ளைகளுடனும், அவர்கள் தங்கள் தகப்பனாருடனும் உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்கிறார்கள். ஒவ்வொரு பிள்ளைக்கும் தனது தகப்பனாரைப்பற்றிய பொறுப்பும் ஒவ்வொரு தகப்பானருக்கும் தனது பிள்ளையைப்பற்றிய பொறுப்பும் இருக்கிறது. தேவன் கர்த்தராகிய இயேசுவையும் சபையையும் பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்கிற உண்மை, அவர்கள் அவருடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்கிறார்கள் என்பதை குறிக்கிறது. (எபிரேயர் 3:6) பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: ''நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்; நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே.'' (ரோமர் 8:16, 17) அவரது கூற்று அந்த உறவை குறிப்பது மாத்திரமல்ல, அதை நிரூபணம் செய்கிறது; ஏனெனில் பிதாவானவர் தமது பிள்ளைகளுக்கு கொடுத்திருக்கிறவைகளில் பிள்ளைகள் உரிமையுடையவர்களாக இருக்கிறார்கள்.

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களும் (மத்தேயு 5:6) ''மானானது நீரோடைகளை வாஞ்சித்து கதறுவது போல'' (சங்கீதம் 42:1) தேவனை நோக்கி கதறுகிற ஆத்துமாவை உடையவர்களும், அவரைக் கண்டுபிடித்து அவருக்கு தம்மை அர்ப்பணம் செய்தவர்களுமாகிய இவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர்களாக இருக்கிறார்கள் என்று பரிசுத்த ஆவி அவர்களுடைய ஆவியுடனே கூட சாட்சி கொடுக்கிறது. (ரோமர் 8:14–16) இவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட புத்திரர்களாக தங்களில் விசுவாசம், வைராக்கியம், சக்தி, விவேகம், உண்மைத் தன்மை மற்றும் கீழ்ப்படிதல் போன்ற நற்குணங்களை காண்பார்கள்.

எனினும் இந்த பலியின் உடன்படிக்கையுடன் குறிப்பிட்ட நிபந்தனைகள் இணைக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பட வேண்டிய சில தேவைகளும் இருக்கின்றன. அனைவரும் கிறிஸ்துவின் பாடுகளில் பங்குபெறுகிறவர்களாக ஆக வேண்டும். அவர்கள் பாடுகளில் பங்கு பெற்றால் வரும் மகிமையிலும் பங்கு பெறுவார்கள். ஆனால் நமது உடன்படிக்கையை கைக்கொள்ளும்படியான ஏற்பாடுகள் கிறிஸ்துவில் முழுமையாக இருக்கிறன்றன. ஆகையால் நம்மை அவர் பொறுப்பில் வைத்தால் இந்த உடன்படிக்கை நித்தியமாக நம்முடன் இருக்கும். மேலும் ''தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை'' நாம் பெறுவோம். (ஏசாயா 55:3)

## உடன்படிக்கையின் உறவு மனுக்குலத்துடன் மறுபடியும் ஏற்படுத்தப்பட வேண்டும்

எரேமியா 31:31–33இல் ''இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்... அந்நாட்களுக்கு பிற்பாடு'' என்று வாசிக்கிறோம். ''அந்த நாட்கள்'' என்பது, இஸ்ரயேலர் நியாயப்பிரமாண உடன்படிக்கையை மீறினதால் தேவன் அளித்த ''ஏழத்தனையான தண்டனையை'' குறிக்கிறது என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். ஏனெனில் புறஜாதியாருடன் தேவன் எந்தவித உடன்படிக்கையும் திட்டம் பண்ணவேயில்லை. புது உடன்படிக்கை இப்படியாக அழைக்கப்படுவதற்கு காரணம், இது பழைய நியாயப் பிரமாண உடன்படிக்கையின் இடத்தை எடுத்துக் கொள்ளும். இந்த நியாயபிரமாண உடன்படிக்கை தேவன் இஸ்ரயேலர்களுடன் செய்து கொண்டது, அவர்களால் முறித்துப் போடப்பட்டது. இஸ்ரயேல் இந்த புது உடன்படிக்கையின் கீழ் நிர்மாணம் செய்யப்பட்ட பிறகு, மற்ற அனைத்து ஜாதிகளும் (நாடுகளும்) பிரமாணத்தில் அமைக்கப்பட்டுள்ளபடி இந்த உறவுக்குள் வருவதற்கு சலுகையைப் பெற்றிருப்பார்கள். அவ்வாறாக அகில உலகமும் கடைசியில் ஆசீர்வதிக்கப்படும்.

பிறகு புது உடன்படிக்கை ஆபிரகாமின் சந்ததியினரோடு செய்யப்பட வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில் அதை அவர்கள் பெறக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஜனங்கள் தேவனுடனான உறவுக்குள் நேரடியாக நுழைய அபாத்திரராயிருக்கிறபடியால், உடன்படிக்கைக்கு ஒரு

மத்தியஸ்தர் வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், அவரது சரீரமாகிய சபையுமே மத்தியஸ்தர். மத்தியஸ்தர் பணி கிட்டதட்ட நிறைவடைந்துவிட்டது என்று வேத வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

தேவனுடைய வசனமானது ஒரு உடன்படிக்கைக்கும் அதன் மத்தியஸ்தருக்கும் இடையேயான வித்தியாசத்தை தெரிவிக்கிறது. மத்தியஸ்தம் முழுமையாக பண்ணப்படும் வரை ஒரு உடன்படிக்கை அமுலுக்கு வராது. நியாயப்பிரமாண உடன்படிக்கையை மத்தியஸ்தம் பண்ணும்போது மோசே முதலாவது பலிகளைச் செலுத்தினார். பிறகு அவர் மிருகங்களின் இரத்தத்தை எடுத்து, இரண்டு பாகமாக பிரித்து ஒரு பாகத்தை நியாயப்பிரமாண புத்தகத்தின் மேலும், ஒரு பாகத்தை ஜனங்களின் மேலும் தெளித்தார். (யாத்திராகமம் 24:4–8; எபிரேயர் 9:19–24) இதை அவர் செய்து முடித்த பிறகு நியாயப்பிரமாணம் அமுலுக்கு வந்தது. அதன் நிஜமாகிய புதிய உடன்படிக்கை அதை நீக்கிப்போடும் வரைக்கும் அது தொடரும்.

புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர் கிறிஸ்துவாக இருப்பார். கடந்த பதினெட்டு (தற்போது 19) நூற்றாண்டுகளாக நமது கர்த்தர் அவருடையதும் அவரது சபையினுடையதுமான மகா உண்மையான பலிகளை செலுத்திக் கொண்டிருக்கிறார். இரத்தத்தை தெளித்து முடித்தவுடனே உலகின் பாவங்களுக்கான நிவர்த்தி பண்ணுதல் செய்யப்படும். இது மோசே இரத்தத்தை புத்தகத்தின் மேல் தெளிப்பதற்கு ஒப்பானதாகும். இந்த ஏற்பாட்டை தெய்வீக நீதி ஏற்றுக் கொண்டு, மத்தியஸ்தர் உண்மையான தெளித்தலை ஜனங்கள் மேல் பண்ணுவார். அதாவது, தேவனுடன் முழுமையான இசைவுக்கு எப்படி, திரும்ப வருவது என்பதை காண்பிப்பார்.

ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டவுடனே புது உடன்படிக்கை, பழைய உடன்படிக்கையை விழுங்க ஆரம்பிக்கும். முதலாவது அதை பெறுபவர்கள் பழங்கால பாத்திரர்கள் (பழைய ஏற்பாட்டுகால விசுவாசிகள்) என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மனித பூரணத்திற்கு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு, பூமியில் புதிய ஏற்பாடுகளின் உட்கருவை உருவாக்குவார்கள். அடுத்த வரிசையில் வருபவர்கள், கிறிஸ்தவர்கள் என்று அறியப்பட்டு மரணத்துக்குள்ளான ஞானஸ்நானம் பெறாதவர்களும் நியாயப்பிரமாணத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டு கடின மனதுடைய யூதர்களுமாகும். நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கிற அனைவர் மேலும் வெளிச்சமானது படிப்படியாக வரும். அனைத்து தீமையான காரியங்களிலிருந்தும் தெளிக்கப்பட்டவர்கள். தேவனிடம் தங்களது முழு விசுவாசத்தையும் அறிக்கையிடுவார்கள், ஏற்ற காலத்தில் இந்த வெளிச்சம் அனைத்து உறவினருக்கும். மொழியினருக்கும் ஜாதியினருக்கும் பரவும்.

## ஆயிரவருட யுகத்தில் இருதய மாற்றம்

எரேமியா தீர்க்கதரிசி புது உடன்படிக்கையைப் பற்றி பேசும் போது கூறுகிறதாவது: “அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமங்களை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.” (எரேமியா 31:34) இஸ்ரயேலரின் பாவங்களும் மீறுதல்களும் அவர்களுக்கு எதிராக நினைக்கப்படுவதில்லை. கிறிஸ்து அவர்கள் சார்பில் தோன்றி அவர்களது பாவத்திற்கான நிவர்த்தி செய்வார். பிறகு அவர்கள் சுவிசேஷ யுக சபையைப் போல அவர்களது ஆரம்ப பாவத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாவ நிவாரணமே அனைவருக்கும் போதுமானதாக இருக்கிறது. (1 யோவான் 2:2)

எசேக்கியேல் தீர்க்கதரிசி, அடுத்த யுகத்தில் மனுக்குலத்தின் இருதயங்கள் மாற்றப்படும் என்று நமக்கு கூறுகிறார். அவர் கூறுகிறதாவது: “கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்ன வென்றால்............ உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.” (எசேக்கியேல் 36:22–27) இந்த இருதய மாற்றம் புது உடன்படிக்கையை ஏற்படுத்துவதிலிருந்து முற்றிலும் வேறானது. மனுக்குலத்தின் இருயத்தின் கல்லானதை எடுத்துப்போடுவதற்கும் ஒரு மத்தியஸ்தர் இல்லாமல் நிற்பதற்கும் ஒரு ஆயிரம் வருடங்கள் ஆகும். நித்திய ஜீவனை பெறுபவர்கள் இந்த நிலைமையை அடைய வேண்டும். ஏனெனில் நித்தியமாக ஜீவிக்கப் போகிற தேவனுடைய அனைத்து சிருஷ்டிகளும் அவரது பிரமாணத்தை பூரணமாக கடைப்பிடிக்க வேண்டும்.

ஆயிரம் வருட யுகத்தில் தேவன் ஜனங்களை அங்கீகரிக்கமாட்டார். காரணம் அவர்களது அபூரணமும் பலவீனமுமேயாகும். அவர்கள் பூரணத்திற்கு கொண்டு வரப்படும் வரை அவர்களது தொடர்பு எல்லாம் மத்தியஸ்தர் மூலமே இருக்கும். ஆயிரம் வருட முடிவில் அவர்கள் பிதாவிடம் அவருக்கு முன் குற்றமற்றவர்களாக ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். (1 கொரி 15:24) தேவன் அவர்களை ஆதாமுக்கு கொடுக்கப்பட்டதும், மனுக்குலத்திற்கு அவர் கொடுத்திருக்கிறதுமான பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரராக, அவரது பிள்ளைகளாக ஏற்றுக் கொள்வார். கிறிஸ்துவின் பலியின் புண்ணியம் உலகத்திற்கு பிரயோகிக்கப்படும் அந்தக் கணமே, அவர்கள் மத்தியஸ்தர் பக்கம் திரும்பும் கணமாக இருக்கும். அவர்கள் முழு மனித பூரணத்தை அடையும் வரையும், நேரடியாக பிதாவுடன் அவர்கள் உறவுக்குள் வரும்வரையும், தேவனுடன் மத்தியஸ்தர் மூலமாக மட்டும் உடன்படிக்கையின் உறவுக்குள் இருப்பார்கள்.

புது உடன்படிக்கை நித்தியமாக நீடித்திருக்கும். மோசே நியாயப்பிரமாண உடன்படிக்கையை மத்தியஸ்தம் செய்தது போல, கிறிஸ்து புது உடன்படிக்கையை மத்தியஸ்தம் பண்ணுவார் என்று சொல்வதே சரியானதாக இருக்கும். மோசே தற்போது நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார் என்று கூறுவது சரியாக இருக்காது. ஏனெனில் மத்தியஸ்தம் பண்ணின பிறகு உடன்படிக்கைக்கு ஒரு மத்தியஸ்தர் தேவையில்லை. அதே போல் ஆயிரம் வருடம் முடிந்த பிறகு புது உடன்படிக்கைக்கு மத்தியஸ்தர் தேவையில்லை. ஆனால் “மத்தியஸ்தர்” என்ற பதவி (பெயர்) கிறிஸ்துவுக்கு நித்தியத்துக்கும் இருக்கும். எப்படியென்றால் ஒருவர் “நீதிபதி” என்ற பதவியை பெற்ற பிறகு என்றென்றைக்கும் நீதிபதியாக இருக்கிறார்.

ஆயிரம் வருட யுகத்தில் மேசியா தமது திரும்பக்கொடுத்தலின் வேலையை முடிக்கும்பொழுது, மத்தியஸ்தம் பண்ணுவதை அவர் நிறுத்திக் கொள்வார்.

ஆனால் உடன்படிக்கை தொடர்ந்து இருக்கும். ஏனெனில் தேவனுடனான அந்த உறவு ஜனங்களிடமிருந்து நீக்கப்பட்டால், நித்திய ஜீவன் என்கிற ஆசீர்வாதத்தை அவர்கள் பெறமாட்டார்கள். புதிய உடன்படிக்கையின் சாதகமான சூழ்நிலைகளின் கீழ், ஒவ்வொருவரும், ஆபிரகாமின் வித்தாகிய கிறிஸ்துவின் பிள்ளைகளாகும்படி ஒரு சந்தர்ப்பத்தை பெறுவார்கள்.

ஆயிரம் வருட முடிவில் விருப்பமுள்ளவர்களும் கீழ்ப்படிகிறவர்களும், "நன்றாய் செய்தீர்கள்" என்ற மெச்சுதலைப் பெற்று மானிட சுபாவத்தில் நித்திய ஜீவனுக்கு தகுதியுள்ளவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். நித்திய ஜீவனுக்கு அபாத்திரராக இருப்பவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

## R5164 Distinction between Keeping and Fulfilling the law

# பிரமாணத்தை கைக்கொள்ளுதலுக்கும் நிறைவேற்றுவதற்கும் உள்ள வித்தியாசம்

நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதற்கு கிறிஸ்துவின் மரணம் தேவைப்பட்டதா என்கிற கேள்வி விநோதமான ஒன்றாகவும் மிகவும் ஆழமானதாகவும் இருக்கிறது. ஒரு பக்கம் பார்க்கும்போது, கிறிஸ்துவின் மரணம் தியாகமாக இருந்தது; களங்கமற்ற ஒருவரின் மரணம் தேவைப்படுகிற எந்த பிரமாணமும் நீதியானதாக இருக்க முடியாது; தேவனுடைய பிரமாணம் நீதியானதாக இருப்பதால், ஒரு களங்கமற்ற மனிதனின் மரணம் அதற்கு தேவையில்லை. ஆகையால் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கு இயேசு மரிக்க வேண்டிய அவசியமில்லை. இது ஒரு பக்கமான வாதமாக இருக்கிறது.

இன்னொரு வாதம் என்னவென்றால் தமது முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் தமது தேவனை அன்பு செலுத்தினவரும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற தம்மை அர்ப்பணம் செய்தவருமாகிய நமது கர்த்தராகிய இயேசு தமது அர்ப்பணத்திற்கு இசைவாக வாழ்வதற்கு, அந்த சித்தத்தை முழுவதும் நிறைவேற்றி அதற்கு மாறானவைகளையெல்லாம் தவிர்க்க வேண்டும். ஆகையால் ஒரு பூரண மனிதனுடைய ஜீவன் ஆதாமுக்கும் மனுக்குலத்திற்கும் மீட்பின் கிரயமாக செலுத்தப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தம் என்பதை அவர் அறிந்தவுடனே தம்மை அர்ப்பணத்தில் ஒப்புக் கொடுக்க வேண்டும். மேலும் அந்த அர்ப்பணத்தில் குறிப்பாக உணர்த்துகிற அனைத்தையும் உண்மையுடன் நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் அவர் தேவனை தமது முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும் மனதோடும் மற்றும் பலத்தோடும் அன்பு கூர்ந்தார்.

நமது கர்த்தர் மனிதனாக வந்ததினிமித்தம் கோடான கோடி ஜனங்களுக்கு "அயலகத்தார்" ஆனதினால், மகா துன்பத்தில் இருக்கிற அவர்களை தமது பலியின் மூலம் விடுவிக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தால், தம்மைத்தான் நேசிப்பது போல பிறனையும் நேசித்தால், அவர்களை காப்பாற்றுகிறதற்காக அவர் ஏதாவது செய்ய விரும்புவார் என்று எதிர்பார்ப்பது சரியானதாக இருக்கும். இந்த விருப்பம் பலி கொடுக்க அவரை வழிநடத்தி இருக்கும்.

அத்துடன் இந்த கருத்தையும் சேர்க்கிறோம். நமது கர்த்தர் அழிந்து போவதற்கு தேவன் அனுமதிக்காமல், அவருக்கு ஜீவனையும் மகிமையையும் திரும்பக் கொடுப்பார் என்பதையும், அவர் மரணத்தில் அழிவைக் காணவொட்டார் என்கிற வாக்குத்தத்தத்தையும் இயேசு மனதில் வைத்திருந்தார். ஆகையால் அநீதியுள்ள பிறருக்கும் பதிலாக தாம் மரிப்பதற்கு விருப்பங் கொண்டிருப்பார் என்பதை நாம் உடனே உணர்ந்து கொள்ளுகிறோம். ஏனெனில் அவர் தன்னைத்தான் நேசிப்பது போல பிறரை நேசித்தார்.

இந்த இரு கருத்துக்களும் நேரடியாக எதிரானதாக இருந்தாலும், அது நமது கர்த்தர் என்ன செய்ய வேண்டும் என்பது அவரது சித்தத்துக்கு விடப்பட்டது என்பதில் இசைந்து போகிறது. பிதாவானவர் அவருக்கு முன் ஒரு மகா பெரிய பரிசை வைத்து, ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தார். பிதாவானவர் நமது கர்த்தரை மீண்டும் வராதபடி ஒரு அலுவலில் சிக்க வைக்கவில்லை. இந்த கருத்தில் இந்த பாடத்தை நாம் நோக்கும் போது, இந்த முழு ஏற்பாட்டின் நியாயத்தை நாம் பார்க்கிறோம்.

நமது கர்த்தர் தமது அர்ப்பணத்தில், ஞானஸ்நானத்தில் அவர் கூறியதாவது: "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ, வருகிறேன்." (எபிரேயர் 10:7) உமது தேவைக்கு குறைவானதை நான் செய்ய மாட்டேன். இப்படிப்பட்ட கீழ்ப்படிதலைத்தான் பிரமாணமானது கேட்கிறது. வேறு வகையில் சொல்வோமேயானால், நீதியானது ஒரு பலியை கேட்காது; ஏனெனில் நீதியானது அதைக் கேட்க முடியாது. விருப்பத்துடன் எதையும் செய்யலாம், நீதியானது பிரமாணத்தில் உள்ளதை கைக்கொள்ளும்படி கேட்கும். இந்த கருத்து வார்த்தையில் விளக்கமுடியாத அளவுக்கு மிகவும் சிறப்பாக இருக்கிறது. எனினும் பிதாவானவர் இயேசுவுக்கு முன்பாக பெரிய பரிசை வைத்தார் என்பதையும், அவருக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார் என்பதையும் நாம் அறிந்துகொள்ளக்கூடும். (எபிரேயர் 12:1,2)

### தேவனுடைய சித்தம் நிழல்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கும் அதைக் கைக்கொள்ளுவதற்கும் வேறுபாடு இருக்கிறது. யூதர்கள் இரண்டையுமே செய்யவில்லை. பிரமாணத்தை அவர்கள் கொஞ்சமாக கைக்கொண்டனர். அவர்களுக்கு முடிந்ததற்கு மேலாக கைக்கொள்ள முயற்சித்தனர். அவர்களால் பிரமாணத்தை நிறைவேற்ற இயலவில்லை. அதன் அனைத்து தேவைகளையும் நிறைவேற்ற முடியாதபடி அது மனித சக்தியைக் காட்டிலும் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது.

பிரமாணமானது இரண்டு வெவ்வேறு பகுதிகளை கொண்டிருக்கிறது. ஒன்று நீதிக்கடுத்த ஒழுங்குமுறைகள்– தேவனுக்கும் சக மனிதர்களுக்கும் நிறைவேற்ற வேண்டிய கடமைகள். அதாவது பிரமாணமானது நீதிக்காக நின்றது,

சரியானத்திற்காக நின்றது. யூதர்கள் சரியானதை செய்து, பிரமாணத்தை கைக்கொள்ள முயற்சித்தனர். ஆனால் பரம்பரையான பலவீனத்தினால் அவர்களால் கூடாமல் போயிற்று.

எனினும் இந்த கருத்தில் நமது கர்த்தராகிய இயேசு பிரமாணத்தை கைக்கொண்டார். இதைச் செய்ததின் மூலம் மனித நிலையில் நித்திய ஜீவனுக்கான உரிமையை பெற்றார். அடுத்த யுகத்தில் உலகமானது இதைச் செய்யும். அவர்கள் பிரமாணத்தை கைக்கொள்ள முடிகிறவர்களாக இருப்பார்கள். அவர்கள் பிரமாணத்துக்கு கீழ்ப்படிவதற்கான பரிசாகிய நித்திய ஜீவனைப் பெறுவார்கள். ஆனால் இயேசு நீதியின் பிரமாணத்திற்கு மேலாக கைக்கொண்டார். அவருக்கு பொருத்தக்கூடிய பிரமாணத்தின் பகுதியையும் அவர் நிறைவேற்றினார். இன்னும் அவர் பிரமாணத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

பிரமாணத்தின் மற்ற பகுதி, பரிசுத்த பவுல் மூலம் குறிப்பிடப்பட்ட (எபிரேயர் 10;1) சடங்காச்சார நிழல்களும் அடையாளங்களும் ஆகும். பாவம் மற்றும் மரணம் என்கிற தாழ்ந்த நிலையிலிருந்து தெய்வீக கிருபைக்கு மனுக்குலத்தை திரும்ப கொண்டு வருவதற்கான தெய்வீக சித்தத்தை பிரமாணத்தின் தீர்க்கதரிசன அம்சங்கள் குறிக்கின்றன. பிரமாணத்தின் இந்த தீர்க்கதரிசன நிறைவேறுதல், அதன் மெய்யான முக்கிய அம்சங்களில் ஒன்றான பஸ்கா ஆசரிப்பை செய்வதில் அடங்கியிருக்கிறது. ஆட்டை கொல்லுதல், இரத்தத்தை தெளித்தல் மற்றும் மாம்சத்தை புசித்தல் ஆகியவை தீர்க்கதரிசன நிழல்கள்.

இயேசு மரித்தபோது, அந்த நிழலில் உள்ள அவருக்குரிய பகுதியை நிறைவேற்றினார். தெய்வீக சித்தத்திற்கு தமது சித்தத்தை முற்றிலுமாக பலியிட்ட உயர்ந்த குணத்தினாலேயே இது நடந்தது. தீர்க்கதரிசனங்களை நிறைவேற்ற முடிந்தவராக இருந்தார். ஏனெனில் இவைகள் பொதுவான மனுக்குலத்திற்கான கட்டளைகள் அல்ல. இவைகளில் கட்டளையிடப்படாத யோசனையான காரியங்கள் இருந்தன. ஆனால் இவைகளை தேவன் ஒரு சமயம் யாரோ ஒருவரால் நிறைவேற்றப்பட வேண்டும என்றும் இதன் மூலம் மனுக்குலத்தின் இரட்சிப்பையும், ஆதாமினால் இழந்து போன அனைத்தையும் திரும்ப கொடுக்கவும் விரும்பினார்.

பாவநிவாரண நாளின் பலிகளை நடப்பிக்கும் போது இரத்தமானது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அடையாளமாக பாவநிவர்த்தி செய்யப்பட்டது. இந்த வேலையின் ஒரு பகுதியை இயேசு நிறைவேற்றினார். அதன் பிறகு பரலோகத்திற்கு ஏறிச்சென்று சபை வகுப்பாராகிய நமக்கு நிவர்த்தி செய்தார். அதன் மூலம் நாம் அர்ப்பணத்தினால் அவரது அடிச்சுவட்டில் நடக்கலாம். (எபிரேயர் 9:24) சுவிசேஷ யுகம் முழுவதும் இந்த வகுப்பாரை ஏற்றுக் கொண்டு வருகிறார். முடிவில் அவர்களது பலியை நிறைவேற்றுவார். இது கர்த்தரின் ஆடு கொல்லப்பட்டதின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டது.

இயேசு பிரமாணத்தை அவரது ஊழிய காலத்திலும் கடந்த பதினெட்டு (தற்போது பத்தொன்பது) நூற்றாண்டுகளாக நிறைவேற்றி வருகிறார். இந்த வேலை இந்த யுகம் முடிவடைவதற்கு முன்னால் நிறைவேறாது. நியாயப்பிரமாணத்தை அழிக்க அல்ல நிறைவேற்றவே வந்தேன் என்று இயேசு கூறினார். (மத்தேயு 5:17) நியாய பிரமாணத்தின் நிழல்களை ஆயிரவருட யுகத்தில் நிறைவேற்றும் வரை தொடர்வார், அனைத்தும் ஆயிர வருட யுக முடிவில் நிறைவேற்றப்படும்வரை தொடர்வார். இவைகளில் சில எதிர்காலத்திற்குரியவை; அதாவது உண்மையான கர்த்தரின் ஆட்டின் இரத்தத்தை தெளிப்பது, போக்காட்டை அனுப்புவது, உண்மையான பிரதான ஆசாரியர் ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காக தோன்றுவது போன்றவை, ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இழந்தவைகளை திரும்ப பெறுவதற்கும, கிறிஸ்துவின் புண்ணியத்தினால் திரும்ப பெறக்கூடியவைகளை பெறுவதற்கும் கிறிஸ்துவின் ஆயிரம்வருட ராஜ்யபாரம் முழுவதையும் அது எடுத்துக் கொள்ளும்

## கிறிஸ்துவின் மரணத்தினால் நிறைவேற்றப்பட்ட நியாயப் பிரமாணத்தின் அந்த அம்சங்கள்

நீதியின் பிரமாணமாகிய பத்து கட்டளைகள் மற்றும் உடன்படிக்கையின் தேவைகளை கைக்கொள்ளுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளில் ஜீவன் ஒரு பகுதியாகும். நியாயப்பிரமாணத்தின் தேவைகள் அனைத்தையும் செய்வதினால் இயேசு நித்திய ஜீவனை பெற்றிருக்கக்கூடும், ஏனெனில் பிரமாணமானது நீதிக்கு மேலாக எதையும் கேட்காது. அவர் எந்த உரிமையையும் தியாகம் செய்யாமல் பிரமாணத்தின் ஒவ்வொரு கட்டளையையும் நிறைவேற்றியிருக்கக்கூடும். ஒருவர் தன்னுடைய ஜீவனை பலியிட்டால் ஒழிய நியாயப்பிரமாணத்தின் தீர்க்கதரிசன அம்சங்கள் நிறைவேறியிருக்க முடியாது. இப்படி பலியை செலுத்துபவர் பாவம் செய்தவருக்கு சரிசமானமாக இருக்க வேண்டும். பாவம் செய்தவர், பூரணராக, தேவசாயலில் இருந்தபடியால், சரியான விலைக் கிரயமாக இருப்பவர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வேண்டும்; நியாயப்பிரமாணம் தீர்க்கதரிசனமாக உரைத்த அனைத்து ஆசீர்வாதங்களையும் உலகத்திற்கு கொண்டு வருவதற்கு அவர் பிரமாணத்தை முழுமையாக கடைபிடிப்பவராக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒருவரே பலியை செலுத்த தகுதியுள்ளவராகவும், நியாயப்பிரமாணத்தின் தீர்க்கதரிசன அம்சங்களை நிறைவேற்றுபவராகவும் இருக்கக் கூடும்.

"பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவருமாகிய" இயேசுவே அதன் தேவைகளை நிறைவேற்றினார். நீதி எதிர்பார்க்கிற அனைத்தையும் நிறைவேற்றினார். அவர் சந்தோஷமாக நியாயப்பிரமாணத்தை, அதற்கும் மேலானதை நிறைவேற்றினார். நியாய பிரமாண புத்தகத்திலுள்ள அனைத்தையும் நிறைவேற்ற எண்ணங்கொண்டிருந்தார். ஏனெனில், (எழுதப்பட்ட அனைத்தையும்) "என் தேவனே, உமக்கு பிரியமானதை செய்ய விரும்புகிறேன்" என்று அவர் கூறியிருந்தார். (சங்கீதம் 40:8) அவரது அர்ப்பணம் நீதியின் பிரமாணத்திற்கு மேலாக சென்று, தீர்க்கதரிசனமாக எழுதப்பட்ட அனைத்தையும் நிறைவேற்றினார். இவையனைத்தையும் அவர் நிறைவேற்றினார். அவர் இரட்சகராக இருப்பதின் பலனாக, தம் மூலமாக பிதாவினிடத்தில் வருகிற அனைவரையும், "முற்றுமுடிய இரட்சிக்க" வல்லமையுள்ளவராயிருக்கிறார். (எபிரேயர் 7:25)

நியாயப்பிரமாணத்தின் தேவை வரை வந்து, அதற்கும்மேல் போகாதவர்கள் தேவனை அவமதிப்பார்கள் என்று நாம் எண்ண முடியாது. ஏனெனில் தேவன் கூறியிருந்ததாவது: "இந்த கட்டளைகள் அனைத்தையும் கைக்கொள்ளுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பேன்." நீதியானது இதற்கும் மேலாக கேட்காது. இப்படிப்பட்ட ஒரு மனிதன் பலி செலுத்த முன் வராதிருந்தால், நீதியானது அவமானப்படுத்தப்படாது, ஏனெனில் அப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்க முடியாது.

உண்மையில் இந்த யுகத்தில் நீதிமான்கள் பலியிட வேண்டும் என்று பிதாவானவர் கேட்கவில்லை. மனித பூரணத்திற்கு உலகமானது அப்படிச் செய்ய வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கமாட்டார். தெய்வீக சித்தத்தை செய்ய தங்களது ஜீவனை கொடுக்க ஒரு சந்தர்ப்பத்தை ஒரு மானிட குடும்பத்திற்கு முன்னால் தேவன் வைத்திருந்தால், இதை ஒரு கிருபையாக எண்ண வேண்டும். எனினும் இதைச் செய்ய தவறுகிறவர்களை பிதாவானவர் மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கமாட்டார். ஆனால் கர்த்தரை நேசிக்கிற ஒவ்வொருவரும் இப்படியாக நினைக்க வேண்டும்: "தேவனிடம் எனது நம்பிக்கையையும் விசுவாசத்தையும் காண்பிக்க சந்தர்ப்பம் இங்கே இருக்கிறது." இந்த விஷயத்தில் இயேசுவின் உதாரணமே தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் நித்தியமாக நிலைநிற்கும். தமது சித்தம் என்ன என்பதைப்பற்றி தேவன் ஒரு குறிப்பைக் கொடுத்தால் அதைச் செய்வதற்கு அவர்கள் தயங்க மாட்டார்கள்.

இதில் அன்பைப்பற்றிய பாடமும் இருக்கிறது. "நான் பொய் சொல்லவில்லை; நான் திருடவில்லை; எனக்கு நான் என்ன செய்தேனோ அதையே பிறருக்கும் செய்தேன்" என்று நாம் சொல்வதோடு திருப்தி அடையக்கூடாது. இது போதுமானது என்று இதோடு நிறுத்திக் கொள்ளக் கூடாது. இதற்கு மேலாக ஒருவர் எதையும் செய்யவில்லை என்றால் எந்த நிலைக்குரிய ஜீவனையும் அவர் பெற இயலாது. பிரமாணத்தின் நிழலையும் நமது தலையும் கர்த்தருமானவரின் வார்த்தைகளையும் கவனிப்பது மூலமாகவும் தேவனுடைய சித்தத்தை எதிர்பார்ப்பது நமது சலுகையாக இருக்கிறது. நாம் இப்பொழுது பெற்றிருக்கிற சந்தர்ப்பங்களெல்லாம் ஒப்பிட்டு பார்க்கும்பொழுது, அதை நஷ்டம் என்றும் குப்பை என்றும் நாம் எண்ண வேண்டும். இயேசுவின் அடிச்சுவட்டில் நடப்பதைக் காட்டிலும் வேறு எதுவும் ஒருபெரும் சந்தர்ப்பமாக எண்ணப்படக் கூடாது.

## R5166 Death and the Resurrection

## மரணமும் உயிர்த்தெழுதலும்

மரணமென்பது ஓர் உறக்கமல்ல; அது அழிவு. மரித்த உடல்கள் அழிகின்றன. ஏனெனில் அழிகிற வேலை அதில் நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு இழிவு வைக்கப்பட்டிருக்கிறது என்று நாம் சொல்லுகிறோம். அதாவது அந்த சரீரத்தின் திசுக்களின் உயிர் அழிந்து போகும்வரை இந்த அழிவு தொடர்கிறது. அழியும் இந்த முறை மனிதனுக்கும் மிருகங்களுக்கும் இன்னும் தாவர உலகத்திற்கும் ஒரே மாதிரி இருக்கிறது. வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: "மனுபுத்திரருக்கு சம்பவிக்கிறது, மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு; இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள். ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல; எல்லாம் ஒரே இடத்திற்கு போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது; எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது." பிரசங்கி 3:19, 20

"ஆத்துமா" என்ற வார்த்தைக்கு என்ன பொருள் என்பதை ஒரு சிலரே உணர்ந்திருக்கிறதாக காணப்படுகிறது. மனிதனிடம் ஒரு ஆத்துமா இல்லை என்பதும் மனிதனே ஒரு ஆத்துமா என்பதுமே வேத வாக்கியங்களின் போதனை, ஆதியாகமம் 2:7இல் நாம் வாசிக்கிறதாவது: "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்." தேவனுடைய வசனம் மனிதனையும் மிருகங்களையும் ஆத்துமா என்றே கூறுகிறது. (எண்ணாகமம் 31:28ஐப் பார்க்கவும்.) சரீரம், ஆத்துமா மற்றும் ஆவி அனைத்தும் ஒரு ஜீவியில் ஒன்றாயிருக்கிறது.

ஒரு நாய்க்கு ஒரு சரீரம் இருக்கிறது. ஒரு நாய் முக்கியமான சக்தியாகிய ஜீவனை பெற்றிருக்கிறது. சரீரம் மற்றும் உயிரோடு கூட ஒரு குணத்தையும் பெற்றிருக்கிறது. ஒரு நாய் மற்ற நாயுடன் வேறுபட்டு இருக்கிறது. ஒன்று பயங்கரமான பெரிய நாயாக இருக்கும். மற்றது மடியில் வைத்து வளர்க்கக் கூடிய வகையை சேர்ந்ததாக இருக்கும். ஒவ்வொரு மிருகத்திற்கும் தனிப்பட்ட சந்தோஷம் மற்றும் துக்கம் இருக்கும். இவைகள் எல்லாம் அனுபவத்தை பெற்று தன்னைத் தானே உணர்ந்து கொள்ளச் செய்யும்.

இதே போல் தான் மனிதர்களுக்கும் இருக்கும். ஒரு சரீரமும், ஒரு ஜீவ சக்தியும் சேர்ந்து ஆத்துமாவை உருவாக்குகிறது. அவனது குடும்ப வாழ்க்கை, அவனது கல்வி, அவனது சுற்றுப்புற சூழ்நிலை, அவனது பிரயாணம் அவனது பொருளாதாரம், அவனது தனிப்பட்ட காரியங்கள் அனைத்தும் சேர்ந்த அவனது அனுபவங்கள் அவனது குணலட்சணத்தை உருவாக்குகிறது. அவனது சரீரமல்ல அவனது ஆத்துமாவே இந்த அனுபவங்களைப் பெறுகிறது. இரண்டு நாய்கள் வெவ்வேறான அனுபவங்களின் கீழ் முற்றிலும் மாறுபாடான குணலட்சணத்தை பெறுவதுபோல, மானிடர்களிடையேயும் இருக்கிறது. வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்கள் அனைத்தும் அவர்களை சந்தோஷப்படுத்துகிறது. அல்லது துன்பத்தை அளிக்கிறது. படித்தவனாக அல்லது அறியாமையுள்ளவனாக, ஞானியாக அல்லது பேதையாக ஆக்க உதவுகிறது.

### மரணத்தில் ஒரு மனிதன் என்ன மேன்மையை பெறுகிறான்?

ஒரு மனித ஆத்துமாவுக்கும் மிருக ஆத்துமாவுக்கும் என்ன வித்தியாசம்? மனித ஆத்துமா ஒரு உயர்ந்த சரீர அமைப்பையும் மூளையையும் பெற்றிருக்கிறது. இது அவனை உயர்ந்த நிலையில் வைக்கிறது. தேவ கிருபையால் அவன் ஒரு உயர்ந்த மூளையை மாத்திரம் பெறாமல் மிருகங்கள் சில காலத்திற்கு பிறகு மரிப்பது போல மரிக்கும்படி உண்டாக்கப்படவில்லை. மனிதன் என்னென்றைக்கும் ஜீவித்திருக்கும்படி உண்டாக்கப்பட்டான்.

ஏதேனில் கீழ்ப்படியாமையினால் மரண தண்டனைக்கு கீழாக வந்தான். முழு மனுக்குலமும் மரிக்கும் நிலையிலேயே பிறந்திருக்கிறார்கள். ஒவ்வொரு மனிதனும் ஒரு உயிர்ப்பொறியை தன் பெற்றோர்களிடமிருந்து பெறுகிறான். இது இல்லாதிருந்தால் சரீரமானது மண்ணுக்குத் திரும்பும். மனிதன் மரிக்கும்பொழுது, வம்ச பாரம்பரியம், பெற்றோரின் செல்வாக்குடன் சேர்ந்த அவனது அனுபவத்தின் மூலமாக பெறுகிற குணலட்சணம் அழிந்து போகிறது. ஏனெனில் ஒரு சரீரம் இல்லாமல் அது இருக்க இயலாது. வேத வாக்கியங்கள் அறிவிக்கிறதாவது: "அந்நாளிலே அவனது யோசனைகள் அழிந்துபோம். ஏனெனில் மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள். நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." (சங்கீதம் 146:4; பிரசங்கி 9:5,10)

அப்படியென்றால் ஒரு கேள்வி எழுகிறது. மிருகங்களைப் போலவேதான் மனிதனும் மரிக்கிறானா? தேவன் மனிதனுக்கு எதிர்கால வாழ்க்கையை ஏற்பாடு செய்யவில்லை என்றால் மனிதனைப் பொருத்தவரையில் மிருகங்களைப் போலவே அவனும் மரிக்கிறான் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். தேவன் திரும்ப ஜீவனைக் கொடுக்க உத்தேசித்திருப்பது, சரீரத்தை அல்ல, மரித்த ஆத்தமாவையேயாகும். மரணத்துக்கு சென்ற ஆத்துமாதான் இயேசுவினால் இரட்சிக்கப்பட்டது. (சங்கீதம் 49:15)

உயிர்த்தெழுதல் மூலமாக, தமது அன்பை உலகிற்கு காண்பிக்க தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். வேதவாக்கியங்கள் கூறுகிறதாவது: "காலம் நிறைவேறினபோது தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்." (காலத்தியர் 4:4); "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே." (1 தீமோத்தேயு 2:6) "ஒவ்வொருவருக்காகவும்" (எபிரேயர் 2:9); ஒவ்வொரு மனிதனும் மரணத்துக்குள்ளாக போயிருக்கிறான் அல்லது போய்க் கொண்டிருக்கிறான். மீட்பு கொடுக்கப்படவில்லையென்றால், உயிர்த்தெழுதல் இருக்காது. ஏனெனில் அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: "மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உணடாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்." (1 கொரிந்தியர் 15:21–23)

இந்த உயிரடையச் செய்தல் தான் மரித்தோரின் உயிர்த்தெழுதலாக இருக்கும் – ஒரு மரத்துக்கு எருவாய்ப்போன சரீரத்தின் அணுக்களுக்கு அல்ல, ஆனால் ஜீவிக்கு, ஆத்துமாவுக்கு உயிர்த்தெழுதல். உயிர்த்தெழுதலில், "அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்." (1 கொரிந்தியர் 15:38) ஒருவருக்கு தனது புதிய சரீரம் எதனால் உருவாக்கப்படுகிறது என்பது பற்றி கவலையில்லை. அவரது அக்கறையெல்லாம் தனது ஆத்துமா – தனது ஜீவியம் – தனது குணலட்சணத்தின் உயிர்த்தெழுதலில் தான் இருக்கிறது. இந்த திரும்ப கொடுத்தல் தான் உயிர்த்தெழுதலின் முக்கிய பகுதி.

தேவன் மனுக்குலத்தை பழைய சீருக்கு கொண்டுவருவதற்கான உறுதிமொழியை கொடுத்திருக்கிறார். அவரது வசனத்தை விசுவாசிக்கிற நாம் மிருங்கள் சாகிறது போலேவே மனிதனும் சாகிறான் என்று நினைப்பதில்லை. மாறாக, மிருகங்கள் மறக்கப்படுகிற நிலைக்கு செல்ல நாம் அனுமதிக்கிறோம். ஆனால் மனிதனை நினைக்கிறோம். மரித்துப்போன நமது பிரியமானவர்களுக்கு, நினைவுச் சின்னம் எழுப்புகிறோம். அது அவர்களது குணலட்சணத்தை குறிப்பிடுகிறது. குணலட்சணம் அழியக் கூடியது அல்ல என்று நமது விசுவாசம் உறுதியளிக்கிறது. ஆனால் அது ஒரு உயிர்த்தெழுதலைப் பெறும். நமக்கு பிரியமானவர்கள் மற்றும் நண்பர்களின் கல்லறைகளில் நாம் காண்பிக்கும் மரியாதை, மரித்தோரின் உயிர்த்தெழுதல் மூலமாக அவர்களது எதிர்கால வாழ்வில் நமது நம்பிக்கையை குறிப்பிடுகிறது.

## ஆதாமிய மரணம் தீர்க்கதரிசனமாக நித்திரை என்று அழைக்கப்படுகிறது

வேத வாக்கியங்களில் தேவன், மரணம் என்பது நித்திரை என்ற எண்ணத்தை வைத்திருக்கிறார். அவருக்கு மரித்தோர்களை உயிர்த்தெழுப்பும் நோக்கமும் வல்லமையும் இருப்பதினால் இது போல அவர்களைப் பற்றி பேசக்கூடும். அவர்களது சரீரங்கள் மண்ணுக்கு சென்றுவிட்டன. ஆனால் அவர்கள் ஒவ்வொருவரையும் தேவன் அறிவார். மனிதர்களை மரணத்திலிருந்து எழுப்புவதும் மரணத்திற்கு முன் அவர்கள் பெற்றிருந்த நினைவுகளை அவர்களுக்கு திரும்பக் கொடுப்பதும் பிரமிக்கத்தக்க வேலையாக இருக்கும். அதை சர்வ வல்லமையுள்ள தேவனுடைய ஞானமும் வல்லமையும் மட்டுமே நிறைவேற்ற முடியும். தேவனுடைய வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே அவர்களுக்கு பிரியமானவர்கள் மரணத்தில் நித்திரையாயிருக்கிறார்கள் என்று கூறமுடியும்.

பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்கள் **(Ancient Worthies)** நித்திரையிலிருக்கிறார்கள் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. நாம் வாசிக்கிறதாவது: "தாவீது தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான்." (1 ராஜாக்கள் 2:10) அனைத்து இஸ்ரயேலின் ராஜாக்களுக்கும், அவர்கள் நல்லவர்களோ, கெட்டவர்களோ, இதே கூற்றே சொல்லப்படுகிறது. பரிசுத்த ஸ்தேவான் கல்லெறியப்பட்டு "நித்திரை அடைந்தான்." (அப்போஸ்தலர் 7:60) பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடு கூடக் கொண்டு வருவார்...... கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரை அடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை... கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்." (1 தெசலோனிக்கேயர் 4:14–16)

மகிமையான நாளின் காலையில் ஆரோக்கியம் அளிக்கும் தனது கதிர்களுடன் நீதியின் சூரியன் உதிக்கும்போது ஆசீர்வாதமான காலத்திற்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த அனைத்தும் கடந்து வரும். (மல்கியா 4:2) இதற்கிடையில் மரித்தவர்கள் காத்திருந்த அந்த நாளில், "பிரேதக்குழிகளில் உள்ள அனைவரும் அவரது (மனுஷ குமாரனின்) சத்தத்தைக் கேட்டு எழுந்து வருவார்கள்." (யோவான் 5:28, 29) இந்த அர்த்தத்தில் தான் நாம் மரித்தவர்களை நித்திரையிலிருக்கிறார்கள் என்று கூறுகிறோம். லாசரைப் பற்றி பேசும் போது நமது கர்த்தரே இந்த வார்த்தையை பயன்படுத்தினார். அவர் கூறியதாவது: "லாசரு நித்திரையடைந்திருக்கிறான்." இயேசுவின் சீஷர்களின்

பதிலின் மூலம் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதை காண்பித்ததால், "லாசரு மரித்துப் போனான்" என்று வெளிப்படையாகச் சொன்னார். (யோவான் 11:11-14)

## பரலோகத்திற்குரிய உயிர்த்தெழுதல்

ஒரு நிலையில் மனுக்குலம் அனைத்தும் நித்திரைக்குச் சென்று மகா ஆயிர வருட நாளுக்காக காத்திருப்பார்கள். அப்பொழுது நீதியின் சூரியன் உதிக்கும். மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் உயிர்த்தெழுதல் வரும். இரு தனிப்பட்ட மனிதர்கள் ஒரே மாதிரியான சீரழிவில் இராதபடியினால், சிலர் சீக்கிரம் எழுந்திருப்பார்கள், மற்றவர்கள் தாமதமாக எழுத்திருப்பார்கள். உயிர்த்தெழுதலில் அநேக வகுப்பார் உண்டு என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. அவைகளில் ஒன்று "முதலாம் உயிர்த்தெழுதல்" பிரதானமானது அல்லது மிக முக்கியமானது. இவர்கள் நமது கர்த்தரின் சிங்காசனத்தில் இணைந்திருப்பவர்கள். "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாய் இருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடு கூட ஆயிரம் வருடம் அரசாளுவார்கள்." (வெளிப்படுத்தல் 20:6)

இந்த விளக்கம் திரள் கூட்டத்தாரைத் தவிர்த்து, "திவ்விய சுபாவத்தில் பங்கு பெறுகிற" சிறுமந்தைக்கு மட்டுமே பொருந்துகிறது. (2 பேதுரு 1:4) திரள் கூட்டத்தார் உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய பூரணத்தை அடைவார்கள் என்று மற்ற வேதவாக்கியங்கள் நமக்கு காண்பிக்கின்றன. ஆகையால் நாம் இவர்களுடையதை இரண்டாவது உயிர்த்தெழுதல், வரிசையிலும், மகிமையிலும் முன்னுரிமையிலும் இரண்டாவதாக இருக்கிறது என்று நாம் நினைக்கிறோம். இந்த இரண்டு வகுப்பாரும் பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்களின் சபையை உருவாக்குகிறார்கள். (எபிரேயர் 12:23) இந்த இரு வகுப்பாருக்கும் வித்தியாசம் என்னவென்றால், சிறுமந்தை தாங்கள் காண்கிற கடமைகளையும் பொறுப்புகளையும் வைராக்கியத்துடன் செய்ய முன்னேறுகிறார்கள். ஆனால் திரள் கூட்டத்தார் பலியில் குறைவான வைராக்கியம் உள்ளவர்களாகவும் குறைவான உண்மையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரையோ அல்லது அவரது சத்தியத்தையோ மறுதலிப்பதைக் காட்டிலும் ஜீவனைக் கொடுக்கவும் தயாராயிருப்பார்கள்.

நியாயப்பிரமாண நிழலான ஏற்பாடுகளில் இந்த வேறுபாடு காண்பிக்கப்பட்டிருக்கிறது. லேவி கோத்திரத்தார் இஸ்ரயேலரிலிருந்து ஒரு விசேஷித்த வேலைக்காக பிரித்து எடுக்கப்பட்டது போல, மெய்யான லேவியராக முதற்பேறானவர்களின் சபை உலகத்தாரிலிருந்து அழைக்கப்படுகிறது. இஸ்ரயேலின் ஆசாரிய வகுப்பார், ஆசாரியர்கள் என்றும் லேவியர் என்றும் இரண்டு வகுப்பாராக பிரிக்கப்பட்டது போல, சபையும் இரண்டு வகுப்பார் சேர்ந்ததாக இருக்கிறது. இவர்களில் முற்றும் ஜெயங் கொண்டவர்கள்" "திவ்விய சுபாவத்தில்" பங்கு பெறுகிறவர்களாகவும் மேன்மையையும் பெறுகிறவர்களாகவும் இருப்பார்கள். திரள் கூட்டத்தார் இந்த கனத்தை அடைய மாட்டார்கள்.

யார் "முற்றிலும் ஜெயம் கொண்டவர்கள்," என்பதை நாம் வேறுபடுத்திப் பார்க்க இயலாது. திரள் கூட்டத்தார், பூமியிலும் பரலோகத்திலும் சிறுமந்தையுடன் அடையாளம் காணப்படுகிறார்கள். இரு வகுப்பாரும் "முதற்பேறானவர்கள்." அப்போஸ்தலர் யாக்கோபு கூறுவதுபோல "அவருடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களானவர்கள்." (யாக்கோபு 1:18) இந்த கருத்தை விளக்குவதற்கு நாம் ஸ்டாபெரியின் பாத்தியை எடுத்துக்கொள்ளுவோம். இந்த பெர்ரி பழங்கள் அந்த பருவத்தின் முதற்கனிகளாக இருக்கின்றன. இதிலும் சில பழங்கள் மற்றவைகளைக் காட்டிலும் சீக்கிரம் பழுக்கின்றன. இப்படி முன்னரே பழுக்கிறவைகள் முதற்பலன்களின் முதற்கனிகள் ஆக இருக்கின்றன. இதே போல் தான் சிறுமந்தையிலும் இருக்கிறது.

## பூமிக்குரிய உயிர்த்தெழுதல்

வேத வாக்கியங்களில் மூன்றாவது வகுப்பாராகிய தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். இவர்களில் அநேகர் எபிரேயருக்கான நிருபத்தில் பெயரிட்டு அழைக்கப்படுகிறார்கள். நமது இரட்சகரின் வருகைக்கு முன்னரே வாழ்ந்து விசுவாசிகளாக காணப்பட்டவர்களை நாம் பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்கள் என்று குறிப்பிடுகிறோம். இவர்கள் நமது கர்த்தரின் அடிச்சுவட்டில் நடக்க சந்தர்ப்பம் பெறாதவர்கள். ஆகையால் அவர்கள் "பரம அழைப்பை" பெறவில்லை. இவர்கள் மற்ற மனுக்குலத்தாரைக் காட்டிலும், "மேன்மையான உயிர்த்தெழுதலை" பெறக் கூடியவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். (எபிரேயர் 11:35) மேலான, ஆவிக்குரிய நிலையில் அல்ல, மனித பூரணத்தில் உடனடியான உயிர்த்தெழுதலாக இருக்கும். ஆனால் மனுக்குலத்தின் மற்றவர்களுக்கு ஒரு ஆயிரம் வருடம் தேவைப்படும். அந்த காலப்பகுதியில் அவர்கள் படிப்படியாக ஆதாமினால் இழந்த ஆதி நிலைமைக்கு வருவார்கள்.

கிறிஸ்துவின் ஆட்சியின் ஆரம்பத்தில் பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் சரீரத்திலும் மனதளவிலும் மனித பூரணத்தில் வருவார்கள். அவர்களது சரீரங்கள் அவர்களது நீதிக்குரிய வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்கும். அவர்களுக்கு தழும்புகள் இருந்திருந்தால், அது இனி இராது. அவர்களுக்கு கறைகள் ஏதாவது இருந்திருந்தால், அதுவும் மறைந்து போகும். ஒரு பூரண மனிதனை சித்தரிப்பது நமக்கு சுலபமான காரியமல்ல, ஏனெனில் அப்படிப்பட்ட பூரண மனிதனை நாம் பார்த்ததே கிடையாது. நம்மைச் சுற்றி இருப்பவர்கள் அனைவரும் பல்வேறுவகையான அபூரணர்களேயாகும். ஆனால் ஒரு பூரண மனிதன் உருவத்திலும் அம்சத்திலும், குரலிலும், பார்வையிலும், கேட்பதிலும், ருசிபார்ப்பதிலும் இன்னும் மற்ற எல்லா உறுப்புகளிலும் இன்னும் மனதிலும் பூரணனாக இருப்பான் என்பதை நாம் அறிவோம்.

கடைசியாக, மீதமுள்ளவர்கள், அவனவன் தன் தன் வரிசையிலே எழுந்து வருவார்கள். (1 கொரிந்தியர் 15:23) அவர்களது விழித்தெழுதல், எந்த நிலைமையில் கல்லறைக்குச் சென்றார்களோ அதே நிலைமையில் இருக்கும். ஏனெனில் பாதாளத்தில் "செய்கையும், அறிவும், ஞானமும் இல்லை." (பிரசங்கி 9:10) இந்த விழித்தெழுந்திருத்தல் உயிர்த்தெழுதல் இல்லை. அதற்கான முதற்கட்ட நிலை, "உயிர்த்தெழுதல்" என்ற வார்த்தைக்கு கிரேக்க பதம் "அனாஸ்டசிஸ்" (Anastasis) ஆகும். அதற்கு சரியான பொருள், மறுபடியும் எழுந்து நிற்குதல் என்று பொருள். ஆதாம் விழுந்து போனான்.

அது முதல் "உலகம் பொல்லாங்கிற்குள் – பொல்லாங்கனுக்குள்" கிடக்கிறது. (1 யோவான் 5:19) ஆகவே மறுபடியும் எழுந்து நிற்குதல் என்பது ஏதேனில் இழந்த பூரணத்திற்கு திரும்புதல் ஆகும். உலக மனுக்குலத்திற்கு உயிர்த்தெழுதல் என்பது இழந்ததை திரும்ப பெறுதல் ஆகும். (அப்போஸதலர் 3:19–21)

மேசியாவின் ஆயிர வருட அரசாட்சி காலத்தில் உலகத்தின் உயிர்த்தெழுதல் நடக்கும். இது தேவனால் நேரடியாக நடைபெறாமல், உயிர்த்தெழுப்பும் வேலை கர்த்தராகிய இயேசுவிடம் கொடுக்கப்படும். (யோவான் 5:28, 29) இதை நிறைவேற்ற முழு ஆயிரம் வருடமும் தேவைப்படும். ஆயிரம் வருட ஆளுகையின் முடிவில் உலக மனுக்குலம் ஆதாம் சிருஷ்டிக்கப்படும் போது இருந்தது போல பூரணத்தில் இருக்கும். தேவனுடைய கிரியையெல்லாம் உத்தமமாயிருக்கிறது. (உபாகமம் 32:4; ஆதியாகமம் 1:31)

முன்னரே சொல்லப்பட்டதுபோல, பழைய ஏற்பாட்டுகால பாத்திரவான்கள் தேவனிடத்தில் விசுவாசமாயிருந்ததற்கு பரிசாக, மற்ற மனிதர்களைக் காட்டிலும் மேன்மையான உயிர்த்தெழுதலில் வருவார்கள். மற்ற மனிதர்கள் எப்படி மரணத்திற்கு சென்றார்களோ அதே நிலைமையிலேயே வருவார்கள்; மரிக்கும்போது இருந்ததைக் காட்டிலும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ அறிந்திருக்க மாட்டார்கள்; அவர்களது குணலட்சணங்கள் அதே போல இருக்கும். அவர்களது சரீரங்களைப் பொறுத்த வரையில், பூரணமாயிருக்கும் என்று சொல்ல முடியாது. ஏனெனில் இப்படியாக மனுக்குலம் மரணத்திலிருந்து திரும்ப வரும்போது அவர்கள் ஒருவரையொருவர் அடையாளங்காண முடியாது. அவர்கள் ஒரே நிறத்தில் கொண்டுவரப்பட்டாலும், ஒரே நாகரீக அம்சங்களை உடையவர்களாக எழுப்பப்பட்டாலும் அவர்களை அடையாளம் காண முடியாது. அவர்கள் மூச்சுத்திணரியோ, குண்டு வெடிப்பினால் சிதருண்டோ அல்லது மிருகத்தினால் வேட்டையாடப்பட்டோ மரித்தாலும் சாதாரண உடல் நலத்தில் முன்பு இருந்ததுபோல வருவார்கள்.

மனுக்குலம் சரீர அடையாளத்தினாலும் மனம் மற்றும் நீதிக்கடுத்த குணலட்சணங்களினாலும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொள்வார்கள். விழித்தெழுந்திருக்கும்போது பூரண உருவமோ அல்லது சரியாக சமபடுத்தப்பட்ட மூளையுடனோ கல்லறையிலிருந்து வந்தால் அவர்கள் தங்களையே அறிந்து கொள்ள முடியாது; அவர்களது சிந்தை வேறானதாக இருக்கும்; தமது ஞாபக சக்தியால் தன்னை அடையாளங்காண ஒன்றுமிருக்காது. நமது கர்த்தர் சூம்பின கையையுடையவனைப் பார்த்து, "உன் கையை நீட்டு என்றார். அப்படியே அவன் தன் கையை நீட்டினான். உடனே அவன் கை மறுகையைப்போல சொஸ்தமாயிற்று." இதே போல சொஸ்தமாக்கப்பட்டவர்களாக மனுக்குலம் கல்லறையிலிருந்து எழுப்பப்படுவார்கள். ஆனால் பூரணமுடையவர்களாக அல்ல. புதிய வாழ்க்கையில் ஒரு புது ஆரம்பத்தை உடையவர்களாக எழுவார்கள்.

## ஆயிரம் வருட யுகத்தில் நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் உரியவர்கள் பரிசுத்தம் பண்ணப்படுவார்கள்

மேசியாவின் இராஜ்யத்தின் சாதகமான சூழ்நிலைகளின் கீழ் மனுக்குலம் நீதியையும் ஜீவனையுமோ அல்லது அநீதியையும் நித்திய மரணத்தையுமோ தேர்ந்தெடுப்பதற்கு ஒரு சோதனையை தரும்படிக்கு இரட்சகர் அவர்களுக்காக பாவ நிவாரண பலியைக் கொடுக்கிறார். தேவனுடன் முழு இசைவுக்கு வராதவர்கள் நிந்தைக்கும் இழச்சிக்கும் ஆளாவார்கள் என்று வேத வாக்கியங்கள் குறிப்பாக உணர்த்துகின்றன. (தானியேல் 2:2)

ஆயிரம் வருட சோதனையில் அநேகர் இந்த நிந்தையிலிருந்தும் இழச்சியிலிருந்தும் தங்களை பரிசுத்தப்படுத்திக் கொள்வார்கள். இப்படியாக வருடங்கள் செல்ல செல்ல நிந்தையானது படிப்படியாக ஒழிந்து இகழ்ச்சியானது அழிந்துபோகும். இந்த கருத்து தர்சு பட்டணத்தானாகிய சவுல் விஷயத்தில் விளங்கபண்ணினதை நாம் காண்கிறோம். தேவனுக்கு விரோதமாக தான் போரிடுகிறதை அறிந்தபோது தான் எடுத்திருந்த மார்க்கத்தினிமித்தம் மிகவும் நிந்தைக்குள்ளானார். அவர் தனது விசுவாசத்தை படிப்படியாக தேவனிடம் காண்பித்தபடியால், இந்த நிந்தையிலிருந்தும் அவமானத்திலிருந்தும் தம்மை சுத்திகரித்துக் கொண்டார். கர்த்தரின் ஊழியத்தின் பரிசுத்த பவுலின் தைரியமும் வைராக்கியமும் தர்சு பட்டணத்தானாகிய சவுலாக இருந்து அறியாமல் செய்த காரியங்களை மாற்றிப்போட்டது. ஆகையால் அவரது நிந்தை நீங்கியது.

உலகமானது இந்த நிந்தை மற்றும் இகழ்ச்சியின் நிலைமையில் மரித்தோரிலிருந்து விழிப்பார்கள். ஆனால் படிப்படியாக கீழ்ப்படிதல் இந்த நிலைமையிலிருந்து எழும்பி, தேவனுடைய சாயலாகிய ஆரம்பகால பூரணத்திற்கு செல்லும். மாறாக தெரிந்தே கீழ்ப்படியாதவர்கள் எழும்பமாட்டார்கள். அவர்கள் கீழே அமிழ்ந்து அமிழ்ந்து கடைசியில் நித்திய அழிவுக்குச் செல்வார்கள். அல்லது பரிசுத்த பேதுரு கூறுவதுபோல செல்வார்கள்: "புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல..... தங்கள் கேட்டிலே கெட்டழிவார்கள்." (2 பேதுரு 2:12)

நமது கர்த்தர் தமது முதல் வருகையில் பெரும்பாலான சொஸ்தப்படுத்துதலை ஓய்வு நாளிலேயே செய்தார். இப்படியாக ஆயிரம் வருட யுகமாகிய உண்மையான ஓய்வு நாளில் உலகத்தை சொஸ்தப்படுத்துகிற வேலையை தாம் செய்யப்போவதை அடையாளமாக காண்பித்தார். மனுக்குலமானது கடந்த தண்டனையிலிருந்து விடுதலையாகி சரியான மனித உடல்களுடன், தங்கள் நண்பர்கள் அடையாளம் கண்டு கொள்ளுகிறபடி கல்லறையிலிருந்து எழுந்துவருவார்கள். ஆனால் அவர்கள் சரீர பிரகாரமான, மனதின் பிரசாரமான மற்றும் நீதியின் பிரகாரமான பலவீனங்களை பெற்றிருப்பார்கள்.

மனுக்குலம் உயிர்த்தெழுந்து வருவதற்கான அனைத்து காரியங்களையும் தேவன் கொடுத்திருக்கிறார். மீட்கும் பொருளை மாத்திரமல்ல, கிறிஸ்துவின் மத்தியஸ்தம் செய்யும் ராஜ்யத்தையும் கொடுத்திருக்கிறார். வரக்கூடிய யுகத்தின் உயர்த்தும் செல்வாக்கு மனித இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஏழையாயிருந்தாலும் பணக்காரானாயிருந்தாலும், சிறியவனாயிருந்தாலும், பெரியவனாயிருந்தாலும் திறந்திருக்கும். ஆனால் அவர்கள் ஏற்றுக் கொள்ளுவதும், மறுப்பதும், முன்னேற்றத்தின் தீவிரமும் இந்த விஷயத்தில் அவர்களது அக்கறையை பொறுத்து

இருக்கும். முன்னேற மறுப்பவர்களும், தங்கள் முன்னேற்றத்துக்கு அக்கறை காட்டாதவர்களும் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள்.

முன்னேற்றதை காண்பிக்காதவர்கள் நித்தியமாய் ஜீவிக்க அனுமதிக்கப்படவேண்டும் என்பதற்கு காரணம் ஏதுமில்லை. தேவனுடன் பூரண இசைவுக்கு வருகிறவர்கள் மட்டுமே நித்திய ஜீவனைப்பெறுவார்கள் என்று அறிவிக்கிற அதே நீதிதான் அபூரணத்துடன் ஜீவிக்க தொடருகிறவர்களை அனுமதிக்காது. அவர்கள் நீதியுடன் இசைந்திருக்கவில்லை என்பதை தங்களது மனோபாவத்தின் மூலம் காண்பிப்பார்கள், துன்மார்க்கர்களாக வகைப்படுத்தப்படுவார்கள். இவர்களைப்பற்றிதான், "துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்" என்று எழுதப்பட்டுள்ளது. (சங்கீதம் 145:20)

**R5167** **Quietly minding One's Own Business**

# அமைதலுள்ளவர்களாயிருந்து சொந்த அலுவல்களை பார்த்தல்

*"நாங்கள் உங்களுக்கு கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும்படிக்கு நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும்... உங்களுக்குபுத்தி சொல்லுகிறோம்." (1 தெசலோனிக்கேயர் 4:12)*

சோம்பேரித்தனத்தையும் அசதியையும் சம்பந்தப்படுத்தும் அமைதி என்ற வார்த்தை இருக்கிறது. ஆனால் நமது தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலர் இந்த பொருளில் கூறவில்லை. ஏனெனில் அவர் வேறொரு இடத்தில் "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்" என்று நமக்கு தூண்டுதல் செய்கிறார். (ரோமர் 12:11) இன்னொரு அமைதல் என்ற வார்த்தை சமாதானத்தோடு சம்பந்தப்பட்டு இருக்கிறது. அதாவது பதட்டம், மயக்கம் மற்றும் குழந்தைத்தனத்திற்கு எதிரான அமைதி. இந்த நிலைமையைத்தான் அப்போஸ்தலர் மனதில் வைத்து எழுதியிருக்கிறார் என்று நாம் நம்புகிறோம். கர்த்தருடைய பிள்ளைகள் நன்றாக சமநிலைப்படுத்தப்பட்ட மனதை பெற கற்றுக் கொள்ள வேண்டும். இந்த மனஅமைதி இயற்கையாக பெரும்பாலான ஜனங்களுக்கு இருப்பதில்லை. ஆகையால் இதைக் கற்றுக் கொண்டு அடையப்பெறுதல் வேண்டும். இப்படிப்பட்ட பாடங்களை கற்றுக் கொள்வதற்கு நாம் கிறிஸ்துவின் பள்ளியில் இருக்கிறோம்.

இந்த விரும்பதக்க அமைதி என்பது பரிசுத்த ஆவியின் கிருபைகளாகிய சாந்தம், தயவு, பொறுமை மற்றும் சகோதர அன்பு ஆகியவைகளை குறிக்கிறது. நாம் "ஆவியிலே அனலாயிருந்து, கர்த்தருக்கு ஊழியம் பண்ணும்போது" (ரோமர் 12:11), நாம் சாந்தம், அமைதி மற்றும் அன்பு போன்ற பரிசுத்த ஆவியின் போதனைகளுக்கும் கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும். வாழ்க்கைக்குரிய காரியங்களை நாம் சரியானபடி நிதானிக்கிறவர்களாக இருக்க முயற்சி செய்ய வேண்டும். அற்பமான காரியங்கள் நம்மை தூண்ட அனுமதிக்கக் கூடாது. நாம் உண்மையுடன் பின்பற்றினால் ஆவியின் அமைதலை நாம் பெற முடியும். சொந்த அலுவலைப் பார்ப்பது கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான பாடம். ஒருவொருக்கொருவர் குறுக்கிடுகிறதினாலேயே உலகில் அநேக கஷ்டங்கள் வருவதை கிறிஸ்தவர்கள் கவனிக்கிறார்கள். ஒவ்வொரு கஷ்டத்திலும் அதில் ஈடுபடுகிறவர்களில் ஒருவர் அல்லது இருவருமே தங்கள் அலுவல்களை பார்க்க தவறுகிறார்கள். அவர்கள் தாங்கள் உலகத்தை சரி செய்யும்படி நியமிக்கப்பட்டவர்கள் என்று நினைத்துக் கொள்வதைப் போல காணப்படுகிறார்கள். இப்படிப்பட்ட வேலையை செய்வதற்கு யாருக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டதாக நாம் வேதத்தில் காண்பதில்லை.

பிறரது அலுவல்களில் அநாவசியமாக தலையிடுகிற ஒருவர் அலுவல் அற்றவராயிருக்கிறார். மற்றவர்களுக்கு புத்திமதி கூறுவதும், குறை கூறுவதும், நிந்தித்தலும் கண்டித்தலும் தங்கள் வேலை என்று சில சமயங்களில் நினைக்கிறார்கள். பொன்னான கற்பனை எந்த விஷயத்திலும் தனது கடமை என்பதை முடிவு செய்ய பெரிய உதவி செய்யும். கர்த்தரின் இந்த கட்டளை பிறரது அலுவலில் தலையிடுவதை தடை செய்கிறது. சகோதர அன்புக்கும் பிறரது அலுவலின் தலையிடுவதற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் தனது மனசாட்சிக்கு போதிக்க வேண்டும்; மேலும் அவரை பொருத்தமட்டில் அவரது செயல், வார்த்தை மற்றும் சிந்தனையில் நீதி மற்றும் அன்பின் கொள்கைகளை அப்பியாசப்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும்.

ஏதாவது ஒரு விஷயம் நமது சொந்த காரியமாக இருந்தால் அது பிறரது அலுவல்களில் அநாவசியமாக தலையிடுவதாகாது. அதற்கு நமது சரியான கவனிப்பை கொடுக்கும் போது அது நமது சொந்த அலுவலை கவனிப்பதாகும். சரிபடுத்துதல், கண்டித்தல் முதலானவைகளுக்கு சரியான காலம், இடம் மற்றும் சூழ்நிலைகளை வேதாகமம் குறிப்பிடுகிறது. ஒரு பெற்றோர் தனது குழந்தையை சரிபண்ணலாம்; ஒரு ஆசிரியர் ஒரு மாணவரை சரிபண்ணலாம்; ஒரு பெற்றோர் குடும்ப விவகாரங்களில் தலையிட்டு ஞானத்துடன் வழிநடத்துதலும், ஆசிரியர் பள்ளி அலுவல்களில் தலையிடுவதும், பிறர் அலுவலங்களில் அநாவசியமாக தலையிடுவதாகாது. எனினும் ஒரு குடும்ப அங்கத்தினரின் சொந்த விவகாரத்திலும் அல்லது பள்ளியிலும் தலையிடக் கூடாது. பெற்றோருக்கும் குழந்தைக்கும், ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் உள்ள அதே விதி வீட்டு சொந்தக்காரருக்கும் மற்றும் வேலைக்காரருக்கும் பொருந்தும்.

பிறரை சரிபண்ணுவதில் குறிப்பிட்ட அளவு நேரத்தை செலவு பண்ணுகிறவர்கள், அது சரியானபடி நன்றாக பண்ணப்பட்டாலும், அது தன்னை மறக்கச் செய்யும் என்பதே வாழ்க்கையில் கற்றுக் கொள்ளப்பட வேண்டிய பெரிய பாடங்களில் ஒன்றாக இருக்கிறது. தெய்வீக ஏற்பாடுகளுக்கு இசைவாக தன்னை கொண்டு வருவதும் அதிலே தம்மை தக்கவைத்துக் கொள்ளுவதுமே ஒருவரது முதலாவது கடமையாக இருக்கிறது.

## பிறர் அலுவலில் அநாவசியமாக ஈடுபடுவது அவிசுவாசத்திற்கு அடையாளம்

தேவனுடைய அன்பில் நம்மை வைத்துக் கொள்ளுவதற்கு பரிசுத்த ஆவியின் கிருபைகளையும் கனிகளையும் வளர்க்க வேண்டும். இந்த குணலட்சணங்களை கற்றறிந்து பிரசங்கம் பண்ணக் கூடியவர்கள், அவர்களது அந்த அறிவை தங்களது அனுதின வாழ்க்கையில் சரியானபடி அப்பியாசப்படுத்த முடியாதவர்கள் அநேகர் இருக்கிறார்கள். சாந்தம், தயவு மற்றும் அன்பு போன்றவைகள் தங்களது சொந்த அனுபவத்தில் எங்கே காண்பிக்கப்பட வேண்டும் என்பதை உணராதவர்களாக காணப்படுகிறார்கள். அறிவுரையைக் காட்டிலும் உதாரணம் மூலம் மற்றவர்களுக்கு நன்றாக போதிக்கக்கூடிய காரியங்கள் சில இருக்கின்றன. நாம் வாழ்க்கையின் சிறு காரியங்களில்

அன்பு மற்றும் நீதியினால் ஆளப்படுவதைக் காண்பித்தால், சோதனையில் சாந்தத்தையும், தயவு, அன்பு மற்றும் பிற ஆவியின் கனிகளையும் காண்பித்தால் நன்மையின் செல்வாக்கு நம்மில் அதிகமாக பெருகும்.

உலகில் பாதிபேர் மற்றவர்கள் அலுவலில் அநாவசியமாக தலையிடுகிறவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் இந்த பலவீனத்தினால்தான் அநேக சோதனைகள் அவர்களுக்கு வருகின்றன என்பதையும் வாழ்க்கையை உற்று கவனிக்கிறவர்களை நம்பும்படிச் செய்கிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் யாராவது ஒருவர் ஒரு வேளை கணவனோ அல்லது மனைவியோ, அல்லது குழந்தையோ மற்றவர்களின் அன்பையும் பெருந்தன்மையையும் தவறான முறையில் பயன்படுத்திக் கொண்டு வீட்டை ஆளுகை செய்வார்கள். இப்படிப்பட்ட காரியங்களில் அநீதி செய்யப்படுவது வழக்கமாக இருக்கிறது. ‘‘நான் இதை கையில் எடுக்கவில்லையென்றால் காரியங்கள் சரியாக நடந்திருக்காது’’ என்று கூறி கொண்டு தங்களது முயற்சியை நியாயப்படுத்துவார்கள். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் பிறர் அலுவல்களில் அநாவசியமாக தலையிடுகிறவர்கள் என்று உணரமாட்டார்கள்.

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் தேவன் பேரிலுள்ள விசுவாசக்குறைவை விளங்கச் செய்கிறது. நாம் நமது கடமையை செய்ய வேண்டும், மற்றவைகளை கர்த்தரிடம் விட்டுவிட வேண்டும். தெய்வீக ஏற்பாடுக்கு தங்களை உட்படுத்தாததினால் எதிர்கால சித்தத்தில் அதிகமான இழப்பை பெறுகிற ஜனங்கள் இருக்கிறார்கள். கர்த்தரின் பிள்ளைகளில் யாராவது ஒருவர் அநீதியை நடப்பித்தால் ஒரு புது சிருஷ்டியாக அவர்கள் அபிவிருந்தி அடையமாட்டார்கள். கணவனோ, மனைவியோ அல்லது பிள்ளையோ யாராக இருந்தாலும் பிறரது உரிமைகளில் முரட்டுத்தனமாக தலையிடுகிறவர்களின் செயல் தெய்வீக பிரமாணத்திற்கும் அன்பின் ஆவிக்கும் விரோதமாக இருக்கிறது. ஒரு நாள் அவர்கள் தாங்கள் பெரும் தவறு செய்தோம் என்பதை உணருவார்கள். (கொலோசெயர் 3:18–21)

ஒரு குடும்ப தலைவனுக்கும் ஒரு குடும்பத்திற்கும் பொறுப்பு உள்ளதை உணர்ந்து அதை செய்வது அவரது கடமை. ஆனால் அவர் அதை அன்பான விருப்பத்துடனும் குடும்ப அங்கத்தினர்களின் நன்மைக்கு முன்னுரிமை கொடுத்து செய்ய வேண்டும். ஆகையால் தனது குடும்பத்தில் கணவனின் கடமை என்னவென்றால் தெய்வீக பிரமாணம் அவன்மேல் விதித்திருக்கிற கடமைகள் ஆகும். குடும்ப நலனுக்கு முன்னுரிமைக் கொடுத்து தனது நேரத்தை அதிகம் செலவழிக்க வேண்டும். இந்த பொறுப்புகளை நிறைவேற்றுவது அவரது கடமை. (எபேசியர் 5:25–33; 6:4)

குடும்பத்தில் தாயின் சரியான இடத்தைக்குறித்து வேத வாக்கியங்களும் விளக்குகின்றன. இந்த ஸ்தானம் ஒரு உயர்ந்த இடமாக இருக்கிறது. ஒரு ஸ்திரீயானவள் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று இந்த தவறான முறையில் கொஞ்சகாலம் அவள் மேன்மையடைவதாக காணப்பட்டாலும் நிச்சயமாக அவளுக்கும் அவளது குடும்பத்திற்கும் தீமையையே செய்கிறாள். (1 பேதுரு 3:1–6)

தனது சொந்த குடும்பத்தாரிடம் பொறுமையில்லாமலும் அன்பு இல்லாமலும் இருக்கும் அநேகர் வெளியாட்களிடம் ஒழுக்க சீலர்களாக காணப்படுவார்கள்; விசேஷமாக அவர்களது குடும்பத்தில் ஒரு குறிப்பிட்ட பொறுப்பு அதாவது சரீர மற்றும் மனத்தளவிலான பொறுப்பு இருக்கும்போது தங்களது நடவடிக்கைகளை அவர்கள் நியாயப்படுத்துவது கடினமாக இருக்கிறது. உலகத்தினரிடையேயும், சகோதரரிடையேயும் மாத்திரமல்ல, தனது சொந்த குடும்பத்தினரிடையேயும் தனது நடவடிக்கைகளை ஆராய தேவனுடைய அங்கீகாரத்தை பெறுகிறவர் தன் சொந்த அலுவலை கவனிக்கக் கூடியவர் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வது இன்றியாமையாததாகும்.

**R5168**

## Yet There is Room

# இன்னும் அங்கே இடமிருக்கிறது

*‘‘ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு.’’ (வெளிப்படுத்தல் 3:11)*

ஒருவருக்கென்று அங்கே ஒரு கிரீடம் ஒதுக்கி வைக்கப்படாதிருந்தாலொழிய, சுவிசேஷ யுகத்தின் இந்த கடைசி மணி நேரத்தில் ஒருவர் தன்னை அர்ப்பணம் பண்ணி ஏற்றுக் கொள்ளப்பட கூடுமா என்ற கேள்வி சில சமயம் கேட்கப்படுகிறது. தன்னைத்தானே அர்ப்பணம் பண்ணுவது நிச்சயமாக நடக்கக்கூடியதாக இருக்கிறது. அர்ப்பணமானது எப்பொழுதும் சரியாக இருக்கிறது. சுவிசேஷயுகம் ஆரம்பிப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பு ஆபிரகாம் மற்றும் தீர்க்கதரிசிகள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் பண்ணினார்கள். இந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் தங்களது ஜீவனை நீதிக்கும் தேவனுக்கும் அர்ப்பணம் பண்ணினதை காண்பித்தார்கள் என்று பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார். ஏனெனில் அவர்களில் பெரும்பாலானவர்கள் தேவனுக்காக துன்பப்பட்டு வேதனைப்பட்டு துர்மரணம் அடைந்தார்கள். உலகம் அவர்களுக்கு பாத்திரமாயிருக்கவில்லை என்பதை மெய்ப்பித்தார்கள். (எபிரேயர் 11:33–38) எனினும் அர்ப்பணத்தில் தன்னை ஒப்புக் கொடுத்த ஒருவர் தனது பலியை ஏற்றுக் கொள்ளும்படி கேட்கவில்லை. ‘‘தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல’’ (அப். 10:34) என்பது உண்மையாயிருந்தாலும் அவரது சலுகை முதலாவது யூதருக்கும் பிறகு புறஜாதியாருக்கும் கொடுக்கப்பட்டது. இந்த சலுகை எந்த நிலையிருக்கும் ஜீவராசிகளுக்கும் மிகவும் ஆச்சரியமானதாகும். அதாவது இதன் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளுகிற அனைவரும் கிறிஸ்துவின் மறைபொருளான சரீரமாகிய சபைக்குள் வரலாம். அதாவது தேவையான எண்ணிக்கை நிறைவாகும் வரை அதாவது முன் தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையிலானவர்கள் அர்ப்பணம் செய்து, தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகிற வரை அதில் அங்கமாகலாம்.

நாம் சுவிசேஷ யுகத்தின் முடிவில் இருக்கிறோம் என்பதை வேதவாக்கியங்கள் தெளிவாக குறிப்பிடும்போது, அதன் அர்ப்பணம் செய்த முழு எண்ணிக்கையிலானவர்கள் எப்போது நிறைவடைவார்கள் என்பதை தெரிந்து கொள்வது நமக்குரியதல்ல. பொதுவாக வெளியிலிருந்து அழைக்கப்படுதல் கி.பி. 1881இல் முடிவடைந்து விட்டது என்பது நமது நம்பிக்கையாக இருக்கிறது.

கி.பி.1878–ல் அர்ப்பணம் செய்த அநேகர் தங்களது சோதனையில் முழுமையாக வெற்றி பெறவில்லை என்று நாம் எண்ணுகிறோம். பேர்சபைகளிலிருந்து ஆயிரக்கணக்கானோர்

கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடக்க முழுமையாக அர்ப்பணம் செய்திருந்தார்கள். 1874லிருந்து 1881 வரை அநேக எண்ணிக்கையிலான ஊழியர்கள் இந்த நாட்டிலும் (அமெரிக்கா) வெளிநாடுகளிலும் போதனை செய்தார்கள். சுவிசேஷகர் மூடி என்பவர் மிகவும் அறிந்தவராக இருந்தவர். அவர் அநேகரை மனந்திருப்பினார். அவர் மற்ற சுவிசேஷகர்களைக் காட்டிலும் வேறு மாதிரியாக போதனை செய்ததாக காணப்பட்டார். இயேசுவின் இரத்தத்தினால் முழு பாவ மன்னிப்பு, தேவனிடத்தில் முழு அர்ப்பணிப்பு போன்றவைகளை போதித்தார்.

அந்த மறுமலர்ச்சி காலத்தில், அநேகர் முழு அர்ப்பணம் செய்து, தங்களது நாமம் பரலோகத்தில் எழுதப்படவும் தேவையான எண்ணிக்கையை நிறைவடையவும் செய்தார்கள். ஆனால் சோதனை வந்தபோது அநேகர் திரள் கூட்டத்தாருக்கு மேலான உயர்ந்த பரிசுக்கு அபாத்திரரானார்கள். மற்றவர்கள் அபாத்திரரானவர்களின் இடத்தை எடுத்துக் கொண்டனர். அவர்களும் சோதிக்கப்பட்டு, சலிக்கப்பட்டனர். காலியிடம் ஏற்பட்டது; இன்னும் அநேகர் அந்த ஒரு சந்தர்ப்பத்திற்கு வந்தனர். இந்த காரியங்கள் கடந்த முப்பது ஆண்டுகளாக நடந்து வந்ததற்கான ஆதாரங்களை நாம் காண்கிறோம். இவரது நாமங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதும் அவர்களுக்காக கிரீடம் காத்துக் கொண்டிருக்கிறது என்பதும் உண்மை என்று நாங்கள் நம்புகிறோம்.

## இந்த கருத்துக்கு நாம் கூறும் காரணம்

மத காரியங்களில் அக்கறையில்லாமலிருந்து, அதனிமித்தம் தேவனிடம் அர்ப்பணம் செய்யாதவர்கள், சமீபத்தில் தங்களை தேவனிடம் முற்றிலுமாக அர்ப்பணம் செய்து, அவர்களை தேவன் ஏற்றுக் கொண்டதற்கான ரூபகாரங்களை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தேவனைப்பற்றிய ஆழ்ந்த காரியங்களை அல்லது ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ளும்படியான கண்களை திறக்கப்படுதலை மாத்திரம் பெறாமல், பலியிடுவதற்கான சந்தர்ப்பத்தையும் பெற்றிருக்கிறார்கள். நாம் நம்மை பலியாக ஒப்புக் கொடுப்போம் என்று உடன்படிக்கை பண்ணினாலும் (சங்கீதம் 50:5) அப்படிச் செய்ய சந்தர்ப்பத்தைக் கொடுப்பது தேவன் கையிலிருக்கிறது. சமீபத்தில் அப்பணம் செய்த சிலர், பலியிடுவதற்கான சந்தர்ப்பத்தை பெற்று அதை பயன்படுத்துகிறார்கள் என்ற உண்மை, அவர்கள் அர்ப்பணம் பண்ணினபொழுது இடம் காலியாக இருந்து அதை அவர்கள் நிரப்புகிறார்கள் என்பதை குறிப்பாக உணர்த்துகிறது.

கி.பி. 1878லிருந்து அநேகர் இப்படியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற உண்மை, தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பட்டியலில் கணிசமான காலியிடம் இருக்கிறது என்பதையும், அவை படிப்படியாக நிரப்பப்பட்டு வருகின்றன என்பதை குறிப்பாக உணர்த்துகிறது. எவ்வளவு இடம் காலியாக இருக்கிறது என்றும் எப்பொழுது நிரப்பப்படும் என்றும் சொல்வது நமக்குரியதல்ல. எனினும் அக்டோபர் 1914இல் முடிவடையும் என்று நாம் நம்புகிற "புறஜாதியார் காலம்" முடிவடைவதற்கு முன்னர் அது நிரப்பப்படும் என்று நாம் முழுமையாக நம்புகிறோம்.

இன்னும் தங்களை அர்ப்பணம் செய்யாதவர்களை பரிசுத்த பவுலோடு சேர்ந்து இப்படியாகச் சொல்லலாம்: "உங்கள் சரீரங்களை... ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்." (ரோமர் 12:1) உங்களால் முடிந்ததை செய்யுங்கள். அங்கே இடமிருந்தால் நீங்கள் பெறலாம். உங்கள் நேரம், உங்கள் தாலந்துகள், இன்னும் நீங்க பெற்றிருக்கிற அனைத்தையும் தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணம் பண்ணுங்கள். அவர் ஒரு நல்ல கிருபையளிப்பவர். அவர் என்ன சன்மானம் கொடுத்தாலும் அது உங்களுக்கு பரிசாக இருக்கும்.

கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக ஏற்றுக் கொள்ளப்படவிருக்கிற அனைவரும் ராஜ்யத்தில் திட்டமான இடம் கொடுக்கப்படுவதற்கு முன், விசுவாசம் மற்றும் உண்மைத்தன்மை ஆகிய இரண்டிலும் சோதனைகளைப் பெற வேண்டும். பாதகர்களாக ஆகிறவர்கள் இரண்டாம் மரண வகுப்பில் இடம் பெறுவார்கள். மற்றவர்கள் திரள் கூட்டத்தில் இடம் பெறுவார்கள். இவர்கள் ராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கமாக எண்ணப்பட மாட்டார்கள், அவர்கள் ஒவ்வொருவரும் அபாத்திரராக எண்ணப்பட்டு, அவர்களது முந்தைய இடம் காலியாகி, அவர்களது கிரீடம் நீக்கப்படும். தம்மை அர்ப்பணிக்கிற நாம் இப்படிப்பட்ட காலி இடங்களில் இப்பொழுது நிரப்பப்பட்டு வருகிறோம் என்று புரிந்து கொள்ளுகிறோம்.

பொதுவான அழைப்பு முடிந்துவிட்டது என்று நாம் முன்பே கூறியது போல, நாம் நம்புகிற இந்த நிலைமை 1881இல் இருந்து பெறப்படுகிறது. இடம் காலியாகும்போது, தெரிந்தெடுக்கப்பட்டு காத்திருக்கிற மனோபாவத்தில் இருக்கிறவர்களில் மிகவும் நன்றாக அபிவிருத்தியடைந்து, முழுமையாக கர்த்தரிடத்தில் இணக்கமாக இருக்கிறவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள் என்று நம்புவது நியாயமானது.

"கர்த்தர் உன்னோடிருப்பாராக!" விழுகின்ற நட்சத்திரத்தை போல
பயபக்தியான வெளிச்சத்துடனான ஆசீர்வாதம் நீங்கும்போது;
துன்பத்துடனான இரவும் சந்தோஷமான காலையும்,
எதிரொலிக்காத இனிமையை அருகேயும், தூரத்திலேயும் சுவாசிக்கிறது.

"கர்த்தர் உன்னோடிருப்பாராக!" நிழல் உன்னை பிடித்துக் கொள்ளும்போது
அவரது அன்பின் சக்தி ஆறுதலையும் ஆசீர்வாதத்தையும் நிரூபிக்கிறது.
ஆபத்து உன்னை இருளாக்கி, பயம் சுற்றிமூடும்போது;
அவரது மென்மையில் "கர்த்தர் உன்னோடிருப்பாராக!"

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ, **C.T.** ரசல் அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்,
வெளியிடுபவர்:

சகோ, **R.** செல்வராஜ். சென்னை வேதமாணவர் சபை.
எண்: 22. முதல் தெரு. ராஜீவ் நகர். காலடிப்பேட்டை. திருவொற்றியூர்.
சென்னை- 600 019, கைபேசி: 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**